

# தமிழரசு



# தமிழரசு

1—12—1977

மலர் : 8 இதழ் : 11

## இந்த இதழில்........

| | பக்க எண் |
|---|---|

| குடியரசுத் தலைவரின் வேண்டுகோள் ... | 2 |
| ஒத்துழைப்பு நல்கிடுவீர் ! —பிரதமர் வேண்டுகோள் ... | 5 |
| அல்லற்பட்டோரின் கண்ணீரைத் துடைக்க அரசு அளித்துள்ள உதவிகள்! ... | 6 |
| தோளோடு தோள் நின்று துயர் துடைப்புப் பணிகளுக்கு உதவிடுவீர்!—ஆளுநர் வேண்டுகோள் ... | 9 |
| சீரமைப்புப் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன! ... | 17 |
| கல்நெஞ்சமும் கலங்கும்! ... | 19 |
| படமும் செய்தியும் ... | 22 |
| நீந்திச் சென்றார்! நிவாரணப் பணி செய்தார்! ... | 27 |
| மத்திய அமைச்சர்கள் அளித்த பாராட்டுகள்! ... | 29 |
| மின்னல் வேகத்தில் மின்சாரத் தொடர்புகள் சீரமைக்கப்பட்டன! ... | 32 |
| வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரிசன நல அமைச்சர் ஆற்றிய பணிகள்! ... | 33 |
| வெள்ளத்தை முந்தும் வேகத்தில் வெள்ள நிவாரணப் பணிகள்! ... | 34 |
| அனுதாபம் தெரிவித்தார்கள்! ... | 42 |
| அள்ளியும் கொடுத்தார்கள்! ... | 43 |
| பொருள் குவிகிறது! ... | 45 |
| நிதி குவிகிறது! ... | 46 |
| தருவீர் ஒரு நாள் ஊதியம்! ... | 48 |


## தமிழ்நாட்டில் புயல்—வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்கள் !

| | | |
|---|---|---|
| 1. | உயிரிழந்த மக்கள் ... | 557 |
| 2. | உயிரிழந்த கால்நடைகள்... | 21,982 |
| 3. | காணாமல் போன மக்கள் ... | 199 |
| 4. | காணாமல் போன கால்நடைகள் | 767 |
| 5. | சேதமடைந்த வீடுகள் ... | 4,40,000 |
| 6. | பாழடைந்த நெற்பயிரின் பரப்பு ... | 4,46,698 ஏக்கர் |
| 7. | அழிந்த வாழைத்தோட்டப் பரப்பு ... | 14,000 ஏக்கர் |
| 8. | முறிந்து விழுந்த தென்னை மரங்கள் ... ... | 1 இலட்சத்துக்கும் அதிகம் |
| 9. | உடைப்பு எடுத்த பாசன ஆதாரங்கள் ... | 7,888 |
| 10. | சேதமுற்ற சாலைகள் ... | 5,833 |
| 11. | தொடர்பறுந்த தொலைபேசிகள் | 5,655 |
| 12. | பழுதடைந்த 'டிரான்ஸ்பார்மர்'கள், மின் கம்பங்கள்... | 7,570 |

## முதலமைச்சரின் வெள்ள நிவாரண நிதி!

தமிழக முதலமைச்சரின் வெள்ள நிவாரண நிதிக்கு 30-11-1977 முடிய வசூலான தொகை ரூபாய் 59,16,215.83.

# குடியரசுத் தலைவரின் வேண்டுகோள்



**மே**தகு குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் 25—11—1977 அன்று விமானம் மூலமாக வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

குடியரசுத் தலைவருடன், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு பர்னலா அவர்களும், மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் திரு கே. மனோகரன் அவர்களும் விமானத்தில் சென்றனர்.

தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுடனும், மற்ற அமைச்சர்களுடனும் விமான நிலையத்தில் ஆலோசனை நடத்திய குடியரசுத் தலைவர் அவர்கள் புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட உயிர்ச் சேதம் கேட்டுக் கலங்கினார்! கண்ணீர் சிந்தினார்!

ஐதராபாத்திலிருந்து இந்திய விமானப் படை மூலம் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் 25—11—77 அன்று காலை 10.05 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தார்.

குடியரசுத் தலைவர் விமானத்திலிருந்து இறங்கியவுடன் விமான நிலையத்தில் தமிழக அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறை ஏற்பாடு செய்திருந்த வெள்ளச் சேதங்களை விளக்கும் புகைப்படக் கண்காட்சியைப் பார்த்தார்.

கண்காட்சியில் இடம் பெற்றிருந்த புகைப்படங்களில் புயலால் வாழை மரங்கள் சேதமடைந்திருப்பதைக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரிகள் விளக்கிக் கூறினார்கள்.

சேதமடைந்த வாழை மரங்களின் புகைப்படத்தைப் பார்த்த குடியரசுத் தலைவர் அவர்கள் கண்ணீர் சிந்தியவாறே,

**‘‘வாழை மரங்கள் சேதங்களைக்கூட நாம் சரிசெய்துவிடலாம்! ஆனால், பச்சிளங் குழந்தைகள், வாலிபர்களின் உயிர்களை இழந்திருக்கிறோமே அதை எப்படி ஈடு செய்யப் போகிறோம்? இறந்து போன உயிர்களை நாம் எப்படி மீட்கப் போகிறோம்?’’** என்று கூறிக் கண்கலங்கினார்.

புகைப்படக் கண்காட்சியைப் பார்த்து முடித்த குடியரசுத் தலைவர் அவர்கள், அங்கே இருந்த தமிழக அரசின் அதிகாரிகளிடம்,

**‘‘முதலில் தகவல் தொடர்பு, மின்சார இணைப்புக்களை ஏற்படுத்துங்கள். செலவைப் பற்றிக் கவலைப்படாமல் மனிதாபிமான உணர்வுடன் அதிகாரிகள் செயல்பட வேண்டும்’’** என்று கேட்டுக் கொண்டார்.

அன்று காலை 10.20 மணிக்கு விமான நிலையத்தில் உள்ள ஒரு அறையில் வெள்ள நிவாரண ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருடனும் குடியரசுத் தலைவர் ஆலோசனை நடத்தினார்.



புயல்-வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களின் புகைப்படக் காட்சியை, சென்னை விமான நிலையத்தில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பார்வையிட்டுக் கண் கலங்கினார்.

காலை 11 மணி வரை இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

காலை 11.05 மணிக்கு விமானப் படை விமானம் மூலம் வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட குடியரசுத் தலைவர் அவர்கள் புறப்பட்டார்.

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சை, நாகப்பட்டினம், திருச்சி, குடகனாறு அணைப் பகுதி ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டுச் சென்னை திரும்பினார்.

சென்னையில் பத்திரிகையாளர்களிடம் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் கூறியதாவது :

''தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளை விமானத்தில் இருந்து பார்த் தேன். நெல், கரும்பு போன்ற உணவுப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி இருக்கின்றன.

''முன் எச்சரிக்கையாக இருந்ததால், தமிழ் நாடு காப்பாற்றப்பட்டது! அதிகாரிகளும், மருத்து வர்களும் உடனடியாக வெள்ளப் பகுதிக்கு விரைந்து சென்று நிவாரணப் பணிகளில் ஈடு பட்டுள்ளனர்.

''ஒவ்வொரு குடிமகனும் நிவாரண நிதிக்கு தன்னால் இயன்ற உதவி செய்ய வேண்டும். இதை ஒவ்வொருவரும் தங்களது மனிதாபிமான கடமையாகக் கருத வேண்டும்.

''இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட விளைவு களைப் பொதுமக்கள் தைரியத்துடன் சமாளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் நிவாரணப் பணிகள் அனைத்தையும் மத்திய மாநில அரசுகள் இணைந்து செய்யும்.''

இவ்வாறு மேதகு குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் கூறினார்.

# புயல் வெள்ளச் சேதங்களைக் கண்டு குடியரசுத் தலைவர் கண்ணீர் விட்டார்!

## புயல் விளைவித்த சேதத்தின் மதிப்பு 200 கோடி ரூபாய்!

தமிழகத்தைத் தாக்கிய கடும் புயல்கள், கனத்த மழை ஆகியவற்றினால் ஏற்பட்டுள்ள சேதத்தின் மதிப்பு ஏறத்தாழ 200 கோடி ரூபாய் இருக்கும் என்று தெரிய வருகிறது. சேதங்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு முடிந்ததும், சேதங்களின் மதிப்பு திட்டவட்டமாக அறிவிக்கப்படும்.

## தமிழக அரசு வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளுக்கு முதல்தவணையாக 15 கோடி ரூபாய் வழங்கியது!

## புயல்-வெள்ளத் துயர் துடைப்புப் பணிகளுக்காக மத்திய அரசு 5 கோடி ரூபாய் வழங்கியது!

## மைய அரசு எல்லா உதவியும் செய்யும்!

### பிரதமர் அளித்த உறுதி!

"தமிழ்நாட்டில் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க மத்திய அரசு தேவையான அனைத்தையும் செய்யும்.

"தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள புயல் சேதங்கள் வரலாறு காணாதது. இது நாட்டுக்கே ஏற்பட்ட விபரீதமாகும்.

"புயல் வெள்ள நிவாரண வேலைகள் தமிழ்நாடு அரசு மட்டுமே கவனிக்க வேண்டிய விஷயமல்ல. மத்திய அரசும் மாநில அரசும் தேவையான அனைத்தையும் செய்து வருகின்றன.

"என்ன செய்யப்பட வேண்டுமோ அதை மாநில அரசு செய்யும்; செய்து வருகிறது."

இவ்வாறு மாநிலங்கள் அவையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் கூறினார்.

## தமிழ்நாட்டுக்கு மேலும் ரூபாய் 10 லட்சம்! பிரதமர் அறிவிப்பு!!...

தமிழக புயல் நிவாரண நிதிக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் மேலும் ரூ. 10 இலட்சம் அனுப்பியுள்ளார்.

பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து, இந்த தொகை அனுப்பட்டு உள்ளது.

ஏற்கனவே, அவர் பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கி இருந்தார். தமிழ்நாட்டுக்கு வந்து சேத விவரங்களை நேரில் பார்த்த அவர், இப்போது, மேலும் ரூ. 10 இலட்சம் அனுப்பி உள்ளார். **

புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் தமது ஒரு மாத சம்பளத்தை நன்கொடையாக வழங்கினார்.

# ஒத்துழைப்பு நல்கிடுவீர்!



## பிரதமர் வேண்டுகோள்

தமிழ்நாட்டில் புயல், மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், நாகப்பட்டினம் பகுதிகளைப் பார்வையிடுவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் 30-11-'77 அன்று, விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தந்தார்.

திருச்சி விமான நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழகப் புயல் சேத விவரங்கள் குறித்த புகைப்படத் தொகுப்புக் காட்சியை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் பார்வையிட்டார். பிரதமர் அவர்களிடம், தமிழக அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்ட துயர்துடைப்புப் பணிகளைப் பற்றியும், மின்சார இணைப்பைப் புயலுக்கு முன்னரே துண்டித்து விட்டதால் எப்படி உயிர்ச் சேத எண்ணிக்கையைக் குறைக்க முடிந்தது என்பதைப் பற்றியும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்களும், வருவாய் வாரிய உறுப்பினர் திரு. நடராஜன் அவர்களும், நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து நிறைவேற்றும் அலுவலர் திரு கே. ஆர். ஷெனாய் அவர்களும் விளக்கினார்கள்.

பிறகு, பாதிக்கப்பட்ட பகுதிகளில், புயல்-வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை விமானம் மூலம் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் பார்வையிட்டார். அவருடன் சென்ற மேதகு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களும் சேத விவரங்கள் குறித்துப் பிரதமருக்கு விளக்கினார்கள். தமிழக அரசு மேற்கொண்டுள்ள துயர் துடைப்பு நடவடிக்கைகள் குறித்தும் பிரதமரிடம் அவர்கள் எடுத்து விளக்கினார்கள்.

புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானம் மூலம் பார்வையிட்டு விட்டுத் திரும்பிய மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் கூடியிருந்த பத்திரிகைச் செய்தியாளர்களிடையே பேசுகையில், தமிழகத்தில் நடைபெற்றுவரும் நிவாரணப் பணிகளைப் பற்றிப் பாராட்டினார்.

**“தமிழ்நாடு அரசு அதிகாரிகள் காட்டும் சமூகப்பணி உணர்வைப் பாராட்ட வேண்டும்”** என்று அவர் கூறினார்.

தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு எல்லா வகையிலும் உதவுமா என்று கேட்டதற்கு, **‘இது ஒரு தேசியப் பெருந்துயர்’** என்றும், **‘இதில் எல்லோரும் உதவ வேண்டும்’** என்றும் பிரதமர் பதிலளித்தார்.

**“சமீபத்திய புயல், வெள்ளச் சேதம் காரணமாக ஏற்பட்டுள்ள இழப்பு தேசத்தையே உலுக்கிய ஒரு பேரிழப்பாகும். மத்திய அரசும், மாநில அரசும் மட்டுமே இந்த இழப்பைச் சரிகட்டி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்து விட முடியாது. அனைவரும் தங்களால் இயன்ற அளவுக்கு இந்தத் துயர் துடைப்பு முயற்சிகளுக்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் தரவேண்டும்”** என்றும் பிரதமர் கூறினார்.



# அல்லற்பட்டோரின் கண்ணீரைத் துடைக்க அரசு அளித்துள்ள உதவிகள்!

வரலாறு காணாத வகையில் தமிழகத்தில் அண்மையில் வீசிய கடும் புயல்கள், பெய்த பெருமழை ஆகியவற்றினால் ஏற்பட்ட சேதங்கள், 'போர்க்காலப் பணிகளைப் போல்' மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள், வெள்ள நிவாரண நிதி வசூல் போன்றவைகளைக் குறித்து விவாதிப்பதற்காகத் தமிழக அமைச்சரவைக் கூட்டம் 28-11-1977 அன்று காலை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புயலாலும், வெள்ளத்தாலும் இன்னலுற்ற மக்களின் துயரைக் குறைக்கவும், மீண்டும் அவர்கள் தத்தம் தொழிலில் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் வேண்டி அமைச்சரவை பல முடிவுகளை எடுத்துள்ளது.

அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை விளக்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிக்கையில், பின்கண்ட 25 உதவிகளையும், சலுகைகளையும் தமிழ்நாடு அரசு அளிக்கும் என்று அவர் அறிவித்துள்ளார்.

## குறுகிய காலக் கடன் மத்தியக் காலக் கடனாக மாற்றப்படும்!

1. புயலாலும், வெள்ளத்தாலும் பயிர்கள் சேதமடைந்துள்ள பகுதிகளில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடனாக மாற்றப்படும். இதற்கு ''அன்னாவாரி'' சான்றிதழ் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

## மத்திய காலக் கடன்

2. மத்திய காலக்கடன்களைப் பொறுத்தவரையில் இயன்ற நிவாரணம் அளிக்க 'ரிசர்வ்' வங்கியுடன் தொடர்பு கொள்ளப்படும்.

## இலவச நெல்விதை

3. தாளடிப் பயிருக்கு நாற்றுப் பாவிட, நெல் விதைகள் இனாமாக வழங்கப்படும்.

## மானிய விலையில் இரசாயன உரம்

4. வெள்ளத்தாலும், புயலாலும் சேதமடைந்த பகுதிகளில் தாளடிப் பயிருக்கு உரமிடுவதற்காகச் செயற்கை உரங்கள் 25 சதவிகித மானியத்துடன் வழங்கப்படும். உரச் செலவுக் கானமீதமுள்ள தொகை கூட்டுறவுக் கடனாக வழங்கப்படும்.

## சம்பாப் பயிருக்கு மேலுரமிட மானியம்!

5. சம்பாப் பயிர்கள் பல பகுதிகளில் நீரில் மூழ்கி உள்ளன. இதனால் மகசூல் பாதிக்கப்படும். இந்தப் பகுதிகளில் மீண்டும் ஒருமுறை யூரியா மேலுரமாக இடுவது அவசியம். மேலுரம் இடுவதற்கான உரச் செலவில் 25 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். உரத்திற்கான மிகுதிப் பணம் கூட்டுறவு கடனாக வழங்கப்படும்.

## மானிய விலையில் பயிர் பாதுகாப்பு மருந்துகள்

6. 1978 மார்ச் மாதம் 31-ஆம் நாள் வரை, மாநிலம் முழுவதும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 25 சதவிகித மானியத்துடன் எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.

## மூடிய மணலை அகற்ற உதவி!

7. மணலால் மூடப்பட்ட நிலங்களில் சிறு விவசாயிகளுக்கு அரசே தன் பொறுப்பில் மண்ணை அகற்றித் தரும்.

8. ஏனைய விவசாயிகளுக்கு மண்ணை அகற்ற 50 சதவிகிதம் மானியம் வழங்கப் படும்.

## இலவசமாகத் தென்னங்கன்றுகள்

9. பரந்த அளவில் தென்னை மரங்கள் சேதமடைந்துள்ளன. தென்னை சேதமுற்ற பகுதிகளில் தென்னங் கன்றுகள் இனமாக வழங்கப்படும்.

## கரும்பு, வாழைத் தோட்டங்களைப் புதுப்பிக்க மானியம்!

10. சேதமுற்ற கரும்பு, வாழைத் தோட்டங்களை மீண்டும் புதுப்பிக்க ஒரு ஏக்க ருக்கு ரூ. 100 என்ற அடிப்படையில் மான்யம் அளிக்கப்படும்.

## சிறுவிவசாயிகளுக்கு மானியம்!

11. விதை, உரம், விதை முதல் போன்ற பொருளுக்கான மானியங்கள் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும். (நீர்ப் பாசன வசதியுள்ள நிலமாக இருந்தால் (நன்செய்) 2.50 ஏக்கரும், அதற்குக் குறைவான நிலங் களுடையவர்களும், இதர நிலங்களாக இருந் தால் (புன்செய்) 5 ஏக்கரும், அதற்குக் குறை வான நிலங்கள் உடையவர்களும், குத்தகைக் குச் சாகுபடி செய்பவர்களும் சிறுவிவசாயிகள் எனக் கணக்கிடப்படுவர்)

## நில நீர் வரிகளுக்கு விலக்கு!

12. புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நில வரி, நீர்த் தீர்வை, இதர நிலவரிகள், இதர நீர் வரிகள், வர்த்தகப் பயிர்கள் வரி ஆகியவைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

13. எங்கு நில வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் உள்ளூர் வரி ('லோக்கல் செஸ்') விலக்கும் அளிக்கப் படும்.

14. இதே இடங்களில், ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளூர் வரியின் மேல் விதிக்கும் கூடுதல் வரியையும் ('லோக்கல் செஸ் சார்ஜ் ஜையும்') தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அரசு கேட்டுக் கொள்ளும்.

## தக்காவிக் கடன் தள்ளிவைப்பு!

15. நிலவரி மற்றும் 'லோக்கல் செஸ்' தள்ளுபடி பெறுகின்ற நபர்களுக்கு தக்காவிக் கடன் பாக்கிகளும், நடப்பு ஆண்டில் செலுத்த வேண்டிய தக்காவிக் கடன் தவணையும் 1387-ஆம் பசலியிலிருந்து 1388-ஆம் பசலிக்குத் தள்ளி வைக்கப்படும்.

## கால்நடைகள் வாங்கக் கடனுதவி!

15. கால்நடைகளை இழந்த விவசாயி களுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் கால்நடை வாங்கக் கடனுதவி வழங்கப்படும்.

## மீனவர்களுக்கு உதவி!

17. கட்டுமரம், நாட்டுப் படகுகள், வலைகள் ஆகியவற்றை இழந்த மீனவர்களுக்கு 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சத விகிதம் கடனுகவும் அளித்து மேற்கண்டவற் றைப் பெற உதவி அளிக்கப்படும்.

## கைத்தறி நெசவாளர்களுக்கு

18. கைத்தறி நெசவுத் தொழிலாளர் களுக்கு அவர்களின் நட்டங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை தயாரானதும் நிவாரணம் பற்றி அறி விக்கப்படும்.

## குடிசை இழந்தவர்களுக்கு உதவி!

19. குடிசை இழந்தோருக்கு ஏற் கெனவே அறிவிக்கப்பட்ட ரூ. 100-க்கும் மேலாக, மேலும், ரூ. 100 சேர்த்து மொத் தம் ரூ. 200 தரப்படும்.

20. மேலும் அவர்களுக்கு வீடுகட்ட கடனுக ரூ. 300 தர மத்திய அரசின் உதவி கோரப்படும்.

## கட்டடப் பொருள்களின் விலை கட்டுப்படுத்தப்படும்!

21. அவசிய பண்டங்கள் சட்டத்தின் கீழ், மத்திய அரசு அனுமதியுடன் கட்டடப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும், நிர்ணயப்படுத்தவும், நடவடிக்கை உடனடி யாக எடுக்கப்படும். செங்கல், கீற்றுகள், மூங்கில், சவுக்குக் கம்புகள், நார்க்கயிறுகள் ஆகியவை இதில் உட்படும்.

## சில்லறை விற்பனை நிலையங்கள் துவக்கப்படும்!

22. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூங் கில், சவுக்குக் கம்புகள் மற்றும் கட்டடப் பொருட்களைச் சில்லறை விற்பனை செய்ய நிலையங்கள் துவங்கப்படும்.

## தென்னங்கீற்றுகள் வரவழைக்கப்படும்!

23. பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடி யிருப்பு வசதிகள் ஏற்படுத்த தென்னங் கீற்றுகள், மூங்கில் கம்புகள் ஆகியவற்றை இதர மாநிலத்திலிருந்து பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சிமெண்ட் தேவை

24. வீடுகள், பாலங்கள் மற்றும் கட்டட வேலைகளுக்குத் தேவையான சிமெண்ட் கோட்டாவை மாநில அரசிற்கு அதிக அளவில் உடனடியாக வழங்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## பொதுக் கொட்டகைகள் அமைக்கப்படும்!

25. பொதுக் கட்டடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும், வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட மக்களை, பொதுக் கொட்டகைகள் ( Dormitories ) அமைத்து அவற்றில் வசிக்க ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.




## தமிழ்நாடு பரிசுச்சீட்டு
## பொங்கல் சிறப்புக் குலுக்கலில்
## மாபெரும் பரிசை வென்றிடுவீர்!

இவ்வாண்டு, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் பொங்கல் சிறப்புக் குலுக்கல் கூடுதலான எண்ணிக்கையுள்ள பரிசுகளேயும், தனிச்சிறப்புப் பரிசுகளேயும் அளிக்கிறது.

சிறப்புக் குலுக்கல் மூலம் மேலும் முக்கியமானதொரு பயன். தமிழ்நாடு முழுவதும் 4,000க்கு மேற்பட்ட கிராமங்களில் குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்காக அதிக நிதி திரட்டப்படும். பரிசுச் சீட்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளே அதுதானே?

மொத்தப் பரிசுகளின் எண்ணிக்கை 13,075.
மொத்தப் பரிசுத் தொகை ரூ. 41 லட்சம்.

**எல்லா வரிசைகளுக்கும் பொதுவான சிறப்புப் பரிசுகள்**

| | |
|---|---|
| 2 முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. 5 லட்சம் |
| 3 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. 1 லட்சம் |

**மற்றும் பத்து வரிசைகளில் (AO விலிருந்து AX வரை)**
**ஒவ்வொரு வரிசையிலும் இதர பரிசுகள்**

| | | |
|---|---|---|
| 2 | முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. | 50,000 |
| 2 | இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. | 10,000 |
| 3 | மூன்ருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. | 5,000 |
| 50 | நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. | 1,000 |
| 50 | ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. | 500 |
| 200 | ஆருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. | 100 |
| 1,000 | ஏழாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. | 50 |

**பரிசுச் சீட்டு ஒன்றின் விலே: ரூ 1 மட்டுமே.**

குலுக்கல் தேதி: 21-1-1978




## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு வாங்குங்கள்
## —மக்களின் நல்வாழ்வுக்கு உதவுங்கள்

வெளியிட்டோர்: இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை 600 002.




# தோளோடு தோள் நின்று துயர்துடைப்புப் பணிகளுக்கு உதவிடுவீர்!

## — ஆளுநர் வேண்டுகோள்!

[சென்னை இராஜாஜி மண்டபத்தில் 23—11—'77 அன்று நடைபெற்ற நகரப் பொதுமக்கள் சிறப்புக் கூட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், புயல் நிவாரணம் குறித்து ஆற்றிய உரை]

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

தமிழ்நாட்டிற்கு மழை வழங்கும் வடகிழக்குப் பருவ மழை இந்த ஆண்டில் முன் கூட்டியே-அக்டோபர் மாத ஆரம்பத்திலேயே-தொடங்கி 17-ஆம் தேதி முதல் வலுத்துப் பெய்தது. வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளபடி 1977 அக்டோபர் முதல் நாள் முதல் நவம்பர் 17-ஆம் நாள் வரை 14,824 மில்லி மீட்டர் அளவுக்குப் பெருமழை பெய்திருக்கிறது. வழக்கமாகப் பெய்யும் மழையளவைக் காட்டிலும் இது 6,219 மில்லி மீட்டர்-அதாவது 72 சதவீதம் கூடுதலானதாகும். இந்த ஆண்டு மாநிலமெங்கும் பரவலாக மழை பெய்தது. வறட்சிப் பகுதிகளான இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களிலும் கூடப் பெருமழை பொழிந்துள்ளது. பருவ மழையையே கண்டறியாத இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை விடாமல் பெய்ததனுல் ஏரி, குளங்கள் அனைத்தும் நிரம்பின. வைகையாற்றில் வெள்ளம் கரை புரண்டோடியதனுல் பரமக்குடி, இராமநாதபுரம் வட்டங்களிலுள்ள பல கிராமங்களும், சிற்றூர்களும் வெள்ளத்தில் மூழ்



கின. ஏரிகளில் பல இடங்களில் உடைப்பெடுத்துக் கொண்டதனால் பக்கத்துக் கிராமங்களும், வயல்களும் பெரிதும் பாதிக்கப்பட்டன. 28-10-'77ஆம் நாளன்று இராமநாதபுரத்திலுள்ள பெரிய ஏரியில் உடைப்பு ஏற்படும் நிலைமை இருந்ததால், இராமநாதபுரம் நகரமே அழிந்துவிடுமோ என்ற அச்சமும் உருவாகியது. பெரும் சேதம் ஏற்படக் கூடும் என்பதனை முன்கூட்டியே எதிர்பார்த்து, விழிப்போடிருந்த மக்களும், பொதுப் பணித்துறை அதிகாரிகளும் ஏரியின் கரையை வெட்டித் திருப்பியதோடு ஏரியை நோக்கிப் பாய்ந்த வைகையாற்று வெள்ளத்தையும் கடலில் கலக்குமாறு செய்தனர்.



அக்டோபர் 1977-ல் பெய்த அடை மழையினால் சென்னை மாநகரின் குடிசைகளெல்லாம் வெள்ளத்தில் சிக்கின !

அக்டோபர் மாதம் 17-ஆம் நாள் முதல், 27-ஆம் நாள் வரை பெரும்பாலும் விடா மழை பெய்ததால் சென்னை மாநகரின் தாழ்வான பகுதிகளில் நீர்புகுந்து, பொதுமக்களின் அன்றாட வாழ்வு சீர் குலைந்தது. சென்னையில் வியாசர்பாடிப் பகுதி குறிப்பாகப் பெரிதும் பாதிக்கப்பட்டது. அடையாற்று வெள்ளம் கோட்டூர்புரத்திலுள்ள குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளில் புகுந்தது. கடந்த ஆண்டு சென்னை மாநகரில் ஏற்பட்ட வெள்ள அனுபவம் நமக்குப் படிப்பினையாயிருந்தது. எனவே மழை பெய்யத் தொடங்கியவுடனே தாழ்வான பகுதிகளிலிருக்கும் மக்களை வெளியேற்றியதோடு, சென்னை மாநகராட்சி தாம் அமைத்திருந்த 200-க்கு மேற்பட்ட முகாம்களில் அவர்களுக்குப் புகலிடம் வழங்கியது. வெள்ளப் பாதிப்பின் கடுமை தொடங்கியதுமே வியாசர்பாடி, கோட்டூர்புரம் ஆகிய பகுதிகளிலிருந்தும் ஏனைய பகுதிகளிலிருந்தும் சென்னையில் அமைத்த ஐந்து பெரும் முகாம்களுக்குச் சுமார் 1 இலட்சம் மக்கள் அழைத்து வரப்பட்டனர். அங்கு அவர்களைத் தங்க வைத்ததோடு உணவும் வழங்கப்பட்டது.

அக்டோபர் மாதம் பெய்த மழையின் பிடியிலிருந்து முற்றிலுமாக நாம் விடுபடும் முன்னர்,

சென்னையில் குடிசை இழந்த மக்களுக்காக, 5 பெரும் முகாம்கள் அமைத்துத் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்ததோடு, உணவும் அளிக்கப்பட்டது.



கோட்டூர்புரம் குடியிருப்புகளில் வெள்ளம் புகுந்தபோது காவல் துறையினர் குழந்தைகளைக் காப்பாற்றினர்!



மேலும் ஓர் இடியாகக் கடும் சூறைக் காற்று நவம்பர் 12-ஆம் தேதி காலையிலிருந்தே மணிக்கு 100 கிலோ மீட்டருக்கும் அதிகமான வேகத்துடன், நாகப்பட்டினம் நகரை வன்மையாகத் தாக்கிச் சீர்குலைத்துச் சின்ன பின்னப்படுத்தியது, தொடர்ந்து கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள வட்டங்கள் அனைத்தையும் சூறையாடியது. மேலும், புதுக்கோட்டை, தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களையும்கூட அந்தக் கடுமையான புயல் தனது கொடுமையான பிடிக்குள் சிக்க வைத்தது. பெரும் புயலோடு வலுத்த மழையும் மாநிலத்தைத் தாக்கியது. கால்வாய்களும், காட்டாறுகளும், சிற்றாறுகளும், பேராறுகளும் பெருக்கெடுத்துக் கரை புரண்டு சுற்றுப்புறங்கள் அனைத்தையும் வெள்ளக் காடாக்கியது. புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றிலும், குண்டாற்றிலும் வெள்ளம் மிகுந்து பல கிராமங்களை மூழ்கடித்தது. படகுகளில் தான் இச்சிற்றூர்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அமராவதி ஆற்றிலும், ஆண்டு முழுவதும் அனேகமாக வறண்டு கிடக்கும் வறட்டாறு, குடகனாறு, சாந்தவர்த்தனியாறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்துச் சற்றும் எதிர்பாராவண்ணம் திருச்சிராப்பள்ளி நகரில் புகுந்ததோடு கரூர்ப் பக்கம் பல சாலைகளைச் சீரழித்து அமராவதி இரயில் பாலத்தையும் சிதைத்துச் சென்றது.

மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் அருகேயுள்ள குடகனாற்று அணை உடைந்து தாழ்வான பகுதிகளிலிருந்த கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. கொள்ளிட ஆறும் பல இடங்களில் உடைப்பெடுத்துக்கொண்டு ஊருக்குள் புகுந்தது.

நாகப்பட்டினத்தைப் புயல் தாக்கியவுடன் மேலும் ஒரு புயல் உருவாகித் தீவிரமடைந்து வருவதாக வானிலை ஆராய்ச்சித்துறை அறிவித்தது. இச்சூறைக் காற்று, நவம்பர் 17, 18ஆம் தேதிகளில் பாம்பன் கடற்கரையைத் தாக்கக் கூடும் என்று முதற்கண் எதிர்பார்த்தோம். ஆனால் அது வடக்கே நகர்ந்து நாகப்பட்டினம், கடலூர், சென்னைப் பகுதிகளை நோக்கி வந்தது. பின்னர் திசை மாறி வடக்கு நோக்கி மேலும் நகர்ந்து 19ஆம் தேதி பிற்பகல் ஆந்திர மாநிலத்தில் சிராலாப் பகுதியைத் தாக்கிச் சீரழித்தது. தமிழ்நாட்டின் கடற்கரையோர



## வங்கக் கடலிலே ஒரு புயல் !
## அரபிக் கடலிலே மற்றொரு புயல் !!

(17—11—1977 தேதிய நிலவரம்)

மேலே காணப்படும் படத்தில் வங்கக் கடலில் ஒன்றும், அரபிக் கடலில் மற்றொன்றுமாக இரு பகுதிகள் வெண்மையாகத் தெரிகின்றன. இவ்விரு பகுதிகளும், இரு புயல்களைக் குறிக்கின்றன! 17-11-1977 அன்று காலை 8-25 மணியளவில் இவ்விரு புயல்களும் இருந்த நிலைமையை மேலேயுள்ள படம் எடுத்துக் காட்டுகிறது. இப்படம் செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்டதாகும்.

வங்கக்கடலில் உருவாகி, நாகைப்பட்டினத்தை 12-11-1977 அன்று தாக்கி கரைகடந்து சென்ற புயல்தான் மீண்டும் அரபிக்கடலிலே தோன்றியுள்ளது. (இதுவே திசைமாறி மங்களூருக்கு அருகே கரையைக் கடந்துள்ளது).

அடுத்தாற்போல் உருவாகி, தமிழகத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்த புயலே வங்கக் கடலில் தெரிகிறது. (இதுவே, திசைமாறி ஆந்திராவில் சிராலாவிற்கு அருகே கரையைக் கடந்துள்ளது.



மாவட்டங்களில் வாழும் மக்கள் அனைவருமே இப்புயலால் அஞ்சிப் பெரிதும் திகைத்தனர். புயலால் நேரவிருந்த பாதிப்பை, முடிந்த அளவுக்குத் தணிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு உடனே மேற்கொண்டது. நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையோடும், மாறாக அல்லது வரினும் அஞ்சாமல் எதிர்கொள்ளலாம் என்ற உறுதியோடும் அரசு செயல்பட்டது.



தொடர்ந்து பல நாட்களாக மழை பெய்ததாலும், எண்ணற்ற பகுதிகள் புயலுக்கும், வெள்ளத்துக்கும் இரையானதாலும் தமிழ் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளது. புயலின் கடும் தாக்குதல் போக்குவரத்து வசதிகளையும் சீர்குலைத்துவிட்டது. குறிப்பாகக் கிழக்குத் தஞ்சாவூர்ப் பகுதியில் காவல்துறையினரின் வானொலித் தொடர்புகள் முழுவதுமாக நிலை குலைந்து விட்டன.













ஆறுகளிலும், கால்வாய்களிலும் வெள்ளப் பெருக்கெடுத்து உடைப்பு ஏற்பட்டதாலும், வேரோடு மரங்கள் சாய்ந்ததாலும், சாலைகளும், மின்சார அமைப்பும் இரயில் பாதைகளும் பெரிதும் சீர்குலைந்தன. கிழக்குத் தஞ்சைப் பகுதியில் தொலைபேசித் தொடர்புகளும், மின்சாரத் தொடர்புகளும் இன்னும் சீர் பெறவில்லை. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாகச் செல்ல முடியாத நிலையில், சேதத்தின் அளவைச் சரியாக மதிப்பிட இயலவில்லை.

நமது வேண்டுகோளுக்கு இணங்கி விமானப் படையினரும், கப்பற் படையினரும் 8 விமானங்களைத் தந்து உதவினர். வெள்ளத்தில் சிக்கியிருக்கும் மக்களைக் காப்பாற்றி உடனடியாக நிவாரணப் பணிகளை அவர்கள் மேற்கொண்டனர். நெருங்க முடியாத பகுதிகளில் உள்ள மக்களுக்கு விமானத்திலிருந்து



வெள்ளம் சூழ்ந்த கிராமங்களில் உணவின்றி வாடிய மக்களுக்கு உணவுப் பொட்டலங்களும், அரிசி மூட்டைகளும், பிஸ்கட்டுகளும், விமானத்தில் இருந்து போடப்பட்டன!

உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பெற்றன. நம்மிடமும், இராணுவத்திடமும், உள்ள பல மோட்டார் வண்டிகளும், படகுகளும், பெரிதும் பயன்படுத்தப்பட்டன. மக்களைக் காப்பாற்றும் நிவாரணப் பணியின் முதற்கட்டம் நிறைவேறியுள்ளது.

வெள்ளத்தினல் சீரழிந்த மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் இரண்டாவது கட்டத்தில் நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம். இயற்கையின் சீற்றத்தால் இம் மாநிலம் முழுவதும் பெருந் துயரத்திற்கு ஆளான போது பெருந் துயரையும், பேரிழப்பையும் தணிக்கும் வகையில் சிறந்த முறையில் மீட்புப் பணிக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டு அரும் பணியாற்றிய அரசு நிர்வாகத்தினருக்கும், உள்ளாட்சி மன்றத்தினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்கூட்டியே தக்க நடவடிக்கையை இவர்கள் மேற்கொள்ளாதிருந்தால் மாண்டோர் எண்ணிக்கை மேலும் மிகுதியாயிருந்திருக்கும். நிவாரணப் பணிகளுக்காக விமானங்களையும், இராணுவ வீரர்களையும் கருவி, கலன்களையும், பொருள்களையும் அளித்து உதவிய இராணுவத்தினருக்குச் சிறப்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செஞ்சிலுவைச் சங்கம், இராமகிருஷ்ண மிஷன், கேர் நிறுவனம் போன்ற தொண்டு நிறுவனத்தினர் பணமாகவும், தானியங்களாகவும் பண்டங்களாகவும் பிற வகையிலும் நன்கொடை அளித்ததோடு தொண்டர்களையும் அனுப்பி நிவாரணப் பணிகளிலும் கைகொடுத்து உதவி புரிந்தனர். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

**இயற்கையின் கொடுஞ் சீற்றத்திற்கு உள்ளான மக்களின் துயர் துடைக்க, மாநில அரசு தன்னல் இயன்ற அனைத்தையும் செய்துள்ளது. இனியும் தொடர்ந்து செய்யும் என்று நான் உறுதியளிக்கிறேன்.**

**மீட்புப் பணிகளிலும், நிவாரணப் பணிகளிலும் இராணுவத்தினர் ஆற்றிய பணி பாராட்டிற்குரியது.**



பேரிழப்பிற்கு ஆளானவர்களுக்கும், அனைத்தையுமே இழந்து தவிப்போர்க்கும் என் அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்பாராத வெள்ளத்தால் அல்லல்பட்டு ஆற்ருது அழும் மக்களின் துயரங்களைத் துடைக்க நிதி உதவி செய்யுமாறு மத்திய அரசை வேண்டினேம்.

**முதலமைச்சரும், நானும், டில்லியில் தலைமை அமைச்சரைச் சந்தித்தோம். முதற்கட்டமாக 5 கோடி ரூபாயை மத்திய அரசு மனமுவந்து வழங்கியுள்ளது.**

சேதங்களை மதிப்பிட மத்தியக் குழு ஒன்று விரைவில் வரவிருக்கிறது. வெள்ளம், புயல் ஆகியவற்ருல் ஏற்பட்டுள்ள இப்பிரச்சினை மிகப் பெரியதாகும். அனைத்தையுமே இழந்து அல்லல்படுபவர்கள், தங்களது குடும்பத்தின் தூணாய் நின்று துணையாய் விளங்கியவர்களை இழந்து தவிப்பவர்கள் ஆகியோரின் துயர்களுக்கும் தேவைகளுக்கும் எல்லையே இல்லை. பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளிப்பதே தற்போது நாம் மேற்கொள்ளத்தக்க தலையாய பணியாகும்.

பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப் பணமாகவும், பொருட்களாகவும், தாராளமாகவும், ஏராளமாகவும் நன்கொடை வழங்க வேண்டும் என்று உங்களையெல்லாம் விரும்பிக் கேட்டுக் கொள்கின்றேன்.

சமூக சேவை நிறுவனங்களும், பிற அமைப்புகளும் நாட்டின் பல்வேறு இடங்களில் இயங்கி வருகின்ற ஏனைய நிறுவனங்களையும் அணுகி அவர்களிடமும் வேண்டிய உதவிகளைப் பெற முயல வேண்டும்.

**நாம் மேற்கொண்டுள்ள இந்நற்பணியைச் சிறப்பாக நிறைவேற்ற உங்கள் உயரிய கருத்துக்களை வழங்குவதோடு, எங்களுடன் தோளோடு தோள் நின்று துயர் துடைப்புப் பணிகளுக்கு ஆவன அனைத்தையும் செய்து உதவ முன்வருமாறு அன்போடு அழைக்கிறேன்.**

# சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 1.61 கோடி ரூபாய் நட்டம்!

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளுக்கு அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் மொத்தம் 1.61 கோடி அளவுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று தமிழகக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

தோராய மதிப்பீடுகளின்படி திருச்சியில் மட்டும் பின்கண்ட அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது :

| கல்லூரியின் பெயர் | நட்டம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. சீதாலெட்சுமி ரா்மசாமி கல்லூரி, திருச்சி ... | 43.00 |
| 2. செயிண்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி ... | 31.00 |
| 3. ஹோலி கிராஸ் கல்லூரி, திருச்சி ... | 23.00 |
| 4. பிஷப் ஹிபர் கல்லூரி, திருச்சி ... | 6.50 |
| 5. தேசியக் கல்லூரி, திருச்சி ... | 1.70 |
| | 105.20 |

உடனடி நிவாரண உதவி தேவைப்படும் கல்லூரிகளுக்கு ரூபாய் 2.75 இலட்சம் முன் பணமாக வழங்கச் சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் முடிவு செய்துள்ளது.

## புயலால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு தமிழக அரசு தரும் மானியம் ரூபாய் 10 இலட்சம்.

தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு ரூபாய் 10 இலட்சம் மானியமாக அளிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரது பரிந்துரையின் பேரில், ரூ. 10 இலட்சம் பின்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது :

| கல்லூரிகளின் பெயர் | அரசு அளிக்கும் மானியம் ரூபாய் |
|---|---|
| 1. சீதாலெட்சுமி ராமசாமி மகளிர் கல்லூரி, திருச்சி | ரூ. 4 இலட்சம் |
| 2. செயிண்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி | 2 இலட்சம் |
| 3. பிஷப் ஹிபர் கல்லூரி, திருச்சி | 1 இலட்சம் |
| 4. நேஷனல் கல்லூரி, திருச்சி | 50 ஆயிரம் |
| 5. காதர் மொய்தீன் கல்லூரி, அதிராமபட்டினம் | 25 ஆயிரம் |
| 6. ஏ.டி. என். எம். மகளிர் கல்லூரி, நாகப்பட்டினம் | 20 ஆயிரம் |
| 7. புஷ்பம் கல்லூரி, பூண்டி | 1,500 ரூபாய் |
| 8. பேரவைக் கல்லூரி, பூம்புகார் | 1,500 ரூபாய் |
| 9. மன்னர் கல்லூரி, புதுக் கோட்டை | 1,000 ரூபாய் |
| 10. ராஜா சரபோஜி கல்லூரி, தஞ்சை | 1,000 ரூபாய் |

## சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் 8 இலட்சம் முதல் 10 இலட்சம் ரூபாய் அளிப்பார்கள்!

"சென்னைப் பல்கலைக் கழக அதிகார வரம்புக்கு உட்பட்ட கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து 8 இலட்சம் முதல் 10 இலட்சம் ரூபாய் வரையில் புயல்—வெள்ள நிவாரண நிதி தருவார்கள்" என்று சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள், 23-11-'77 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் கூட்டிய பொது மக்கள் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

"சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளுக்கு ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்கும் மேலாக நட்டம் ஏற்பட்டிருந்தாலும், சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர்களும் மாணவர்களும் சேகரித்து வரும் பணத்தை இதற்குச் செலவிடாமல், புயல்—வெள்ள நிவாரண நிதிக்கே கொடுப்போம்!" என்றும் அவர் தெரிவித்தார்.

"சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர்களும் மாணவர்களும் தங்கள் ஓய்வு நேரங்களில், புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிணறுகளில் தூர் வாருதல், வயல்களில் மூடிய மணலை அகற்றுதல், வீடுகள் கட்டிக் கொடுத்தல் ஆகிய 3 வகைப் பணிகளுக்கு உடல் உழைப்பைத் தருவார்கள்" என்றும் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் அறிவித்துள்ளார்.



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
# பயிர்களுக்குத் தேவை
# விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

# சீரமைப்புப் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன!

''வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பணம் ஒரு பொருட்டல்ல; நிவாரண-சீரமைப்பு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன'' என்று மாண்புமிகு தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு ச. ராமச்சந்திரன் அவர்கள் கூறினார்.

பல்வேறு ஆறுகள், ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகள், அவற்றினால் ஏற்பட்ட சேதங்கள், நெடுஞ்சாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் ஆகியவற்றை மதிப்பிட்டுக் கூற இரண்டு சிறப்புத் தலைமைப் பொறியாளர்கள் விரைவில் தமிழக அரசினால் நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

உடைந்த குடகனாறு அணை, வேடசந்தூர் மற்றும் மதுரை, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய அவர், செய்தியாளர்களிடம் 24—11—1977 அன்று கூறியதாவது:—

### பணம் குறுக்கீடாக நிற்காது!

''சேதமடைந்த சாலைகள், பாலங்கள், உடைப்பு எடுத்த ஏரிகள், ஆறுகள் போன்றவற்றை துரிதமாகச் சீர்செய்து, சீக்கிரமாக, இயல்பான நிலைக்குத் திரும்ப வழி செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு விரும்புகிறது. சீரமைப்பு பணிகள் விஷயத்தில் பணம் ஒரு குறுக்கீடாக நிற்காது!

''மேட்டூர் அணை உடையும் என்றொரு பீதியும் கிளப்பப்பட்டு இருக்கிறது. இந்த அணை உடையும் நிலையே இல்லை. காவிரி ஆற்று நீர் பிடிப்பு பகுதியில் அப்படியொன்றும் மழை பெய்துவிடவில்லை. 40 மில்லி மீட்டர் மழைதான் பெய்து இருக்கிறது. ஆனாலும் காவிரியாற்றில் மீண்டும் வெள்ள அபாயம் ஏற்படுமானால், அதைச் சமாளிக்கத் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

''முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்காது என்று சிலர் கூறுகிறார்கள். வெள்ளம் வந்து சேதத்தை உண்டாக்கிய பல ஆறுகளில், ஆண்டாண்டு காலமாக வெள்ளம் வந்தது இல்லை! வறண்டு கிடந்த அந்த ஆறுகளில் திடீர் என்று வெள்ளம் வரும் என்று யார் எதிர்பார்த்து இருக்க முடியும்?



''குடகனாறு அணை உடைந்ததால்தான் பல கிராமங்களில் வெள்ளம் வந்தது என்று கூறப்படுவதும் சரியல்ல. இந்த அணைக்கு மேல் பகுதியில் உள்ள பல கிராமங்களும் அடித்துச் செல்லப்பட்டு இருக்கின்றன. வானம் திறந்ததுபோல, பலத்த மழை கொட்டியதில் காட்டாறுகள் பெருக்கெடுத்ததாலேயே இந்த சேதம் ஏற்பட்டது.

### மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட சேதம்!

''தஞ்சை, திருச்சி மாவட்டத்தில் மின்சார நிலையங்கள், கம்பிகளுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. ஏறத்தாழ 4 கோடி ரூபாய் சேதம் ஏற்பட்டிருக்கிறது திருச்சியில் மட்டும் மின்சாரத் துறைக்கு ஏற்பட்ட சேதம் 90 இலட்சம் ரூபாய்!''

### கொள்ளிடம் உடைந்ததேன்!

''கொள்ளிடம் ஆற்றில் இதற்கு முன்பு எப்போதுமே ஏற்படாத அளவுக்கு வெள்ளம் வந்தது. 2.85 இலட்சம் கன அடி தண்ணீரைத்தான் இந்த ஆறு தாக்கு பிடிக்க முடியும். ஆனால் 5 இலட்சம் கன அடி தண்ணீர் வந்திருக்கிறது. இதனால் கொள்ளிடம் கரை பல இடங்களில் உடைத்துக் கொண்டது. யுத்த கால அடிப்படையில் இந்த உடைப்புகளைச் சீர்செய்யும் பணி துரிதமாக நடைபெறுகிறது. ஏரி, குளங்களிலும் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் சீர் செய்வதற்கு பொதுப்பணித் துறை அதிகாரிகள்-ஊழியர்களைப் பயன்படுத்தி வருகிறோம்.

### அலுவலர்களுக்குப் பாராட்டு!

''மின்சார வாரிய அதிகாரிகளும், ஊழியர்களும் சிறந்த முறையில் பணியாற்றி இருக்கிறார்கள். புயலின்போது மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட 32 நகரங்களில் 31 நகரங்களுக்கு மின் இணைப்பு கிடைத்துள்ளது. மின்சார வினியோகம் பாதிக்கப்பட்ட 1,149 முக்கிய கிராமங்களில் பெரும்பாலானவற்றுக்கு இப்போது மின்சார வினியோகம் சீராகக் கிடைக்கிறது'' என்று மாண்புமிகு தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு ச. ராமச்சந்திரன் அவர்கள் 24-11-77 அன்று தெரிவித்தார்.



கோ-ஆப்டெக்ஸ்
அளிக்கும்
காஞ்சிபுரம் பட்டுச் சேலை
தங்கத்துக்கு நிகரானது!
ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.
மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி
கோ-ஆப்டெக்ஸ்
ஆடை அணிபவர்
தனிச்சிறப்பை
அதன்
அறிவர்
பண்டைச் சிறப்பும் நவீன
நளினமும் இணைந்து திகழ்வது
வண்ணத்துப்பூச்சி

# கல்நெஞ்சமும் கலங்கும்!

மதுரை மாவட்ட வெள்ளப் பகுதிகளில் எட்டுத் தினங்கள் இரவு பகலாகச் சுற்றி நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்திவிட்டு சென்னை திரும்பியுள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் கூறிய விவரங்கள், கல்நெஞ்சையும் கலக்குவதாக இருந்தன.

வெள்ளம் சூழ்ந்தவுடனேயே அதிகாரிகள் மேற்கொண்ட நிவாரணப் பணிகளைப் பற்றி அமைச்சர் கூறிய விவரங்கள் மெய் சிலிர்க்க வைத்தன.

வெள்ளம் சூழ்ந்த கிராமங்களுக்கு மதுரை மாவட்ட கூடுதல் ஆட்சித்தலைவர் திரு திரிபாதி தன் உயிரையும் பொருட்படுத்தாது சைக்கிளிலேயே சென்று மக்கள் துயர் துடைக்க உதவினார் என்று உணர்ச்சிப் பெருக்குடன் அமைச்சர் கூறினார்.

உயிர்ச் சேதம், பொருட்சேதம் பற்றி அமைச்சர் விவரித்தபோது பல தடவை அவர் உணர்ச்சி வசப்பட்டார். அவரது கண்கள் கலங்கின. அவர் கூறிய விவரம் வருமாறு:—

''என் வாழ்நாளில் இப்படிப்பட்ட கொடூரமான சம்பவங்களை நான் கண்டதில்லை. மாண்புமிகு முதலமைச்சரின் ஆணைப்படி இம்மாதம் 16-ஆம் தேதி விமானம் மூலம் புறப்பட்டு மதுரையை அடைந்தேன்.

''வெள்ளம் சூழ்ந்த பிறகு எந்தெந்தக் கிராமங்களுக்குப் போக முடியவில்லை என்பதைக் கேட்டறிந்தேன். வேடசந்தூருக்குச் செல்லும் வழியில் ஒரு பாலத்தில் உடைப்பு ஏற்பட்டு இருந்ததால் அங்குச் செல்ல முடியவில்லை என்றும், பயங்கர வெள்ளத்தால் சூழப்பட்ட அழகாபுரி, நரசிங்காபுரம், கைத்தியங்கா கோட்டை, இராமநாதபுரம் என்ற கிராமங்களுக்குச் செல்ல முடியவில்லை என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. ஏ. சுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.



''இந்தக் கிராம மக்களுக்குத் திருச்சியிலிருந்து விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

''உடனடியாக அந்தக் கிராமங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டேன்.

''மணல் மூட்டைகளை வெள்ளப் பகுதிகளில் இறக்கி, அக்கிராமங்களுக்கு விரைந்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

''மதுரையிலிருந்து அதிகாரிகளுடன் திருக்கண், லக்கம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு விரைந்தோம். இந்தக் கிராமங்கள் இயற்கையின் சீற்றத்தால் முற்றிலுமாக அழிந்து இருந்தது. ஓரிரு கூரை வீடுகளைத் தவிர இவ்விரு கிராமங்களிலும் இருந்த எல்லா வீடுகளும் நாசமடைந்துவிட்டன.

''நல்லமனார் கோட்டை என்ற கிராமத்தை வெள்ளம் சூழ்ந்து இருந்தது. ஆற்றில் பெருவெள்ளம் ஓடிக்கொண்டு இருந்தது. இக்கிராமத்திற்குச் செல்லவே முடியவில்லை.

''குளத்தூர் என்ற கிராமம் பாதிக்கப்படவில்லை. இவ்வூரில் உள்ள பள்ளிக்கூடக் கட்டடத்தில் திருக்கண், லக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர்களும், நல்லமன்னார் கோட்டையில் இருந்து தப்பி வந்தவர்களும் குடி அமர்த்தப்பட்டுப் பள்ளிக்கூடம் நிவாரண முகாமாகச் செயல்பட்டது.

''இந்த முகாமில் இருந்தவர்கள் கூறிய சோகக் கதைகள் நெஞ்சை உலுக்குவதாக இருந்தன.

**சோகக் கதைகள் !**

''இரவு எட்டு மணி, ஊரில் எல்லோரும் சாப்பிடும் நேரம், திடீரென்று பயங்கரமான சத்தம் கேட்டது.

''சத்தம் கேட்டதும் சாப்பாட்டை விட்டுவிட்டு கை கழுவுவதற்குள் கிராமங்களை வெள்ளம் சூழ்ந்து விட்டது. மொத்த வீடுகளும் நாசமாயின'' என்று அவர்கள் கண்கலங்கக் கூறினார்கள்.

''திருக்கண்ணைச் சேர்ந்த ஒரு பெரியவர் என்னிடம் சொன்ன விவரம் என்னைக் கதிகலங்க வைத்தது.

''திடீரென்று வெள்ளம் சூழ்ந்து விட்டது. வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன; பலர் அடித்துச் செல்லப்பட்டனர். ஒரே ஒரு பையன் மட்டும் என் கையில் சிக்கினான். அவனைத் தூக்கிக் கொண்டு உயரமான ஒரு கூரை மீது உட்கார்ந்து கொண்டேன். விடிய விடிய மழை, குளிர், நாங்கள் உட்கார்ந்து இருக்கும் குடிசையும் அடித்துச் செல்லப்பட்டுவிடுமோ என்ற அச்சம். எப்படியோ தப்பினோம்'

என்று அந்தப் பெரியவர் கண் கலங்கக் கூறினார்.

''குளத்தூரிலிருந்து நேராக லக்கம்பட்டி சென்றோம். போகிற வழியில் ஒரு கிணற்றருகே ஒரு மாடு செத்துக் கிடந்தது. அதன் கண்கள் பிதுங்கி, பார்க்கவே பயங்கரமாக இருந்தது. அந்தச் சுற்றுப்புறம் முழுதும் பிண வாடை வீசிற்று; எங்காவது பிணம் ஒதுங்கியிருக்கிறதா என்று தேடினோம். பிணங்களை இரண்டு அடி ஆழத்திலேயே புதைத்து இருந்ததால் பிணவாடை அடித்தது. நாய், நரிகள் அப்பிணங்

ஏற்பட்ட உடைப்பால் முதல் நாள்வரை வேடசந்தூர் செல்ல முடியவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

''ஏணிகள், கயிறுகள் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் வேடசந்தூர் செல்ல முயற்சித்தும் வெள்ளப் பெருக்கில் இம் முயற்சிகள் பயன் அளிக்கவில்லை.

''ஆனால், அதிகாரிகள், நெடுஞ்சாலை ஊழியர்கள் தீவிரமாகப் பணியாற்றி ஒரே நாளில் இந்த உடைப்பைச் சரிசெய்து, போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தனர்.

வெள்ளத்தைக் கடக்க முடிந்தவர்கள் மட்டும் கடந்து, திருச்சி திண்டுக்கல் பஸ்களில் ஏறிக் கொள்வார்கள்.

''நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் தலைமையில் அத்துறை ஊழியர்கள் இரவு பகலாக அங்குத் தங்கிப் பாலத்தைச் சீர்படுத்தினார்கள். கொட்டும் மழையிலும் 'ஜெனரேட்டர்' மூலம் இரவில் விளக்குகளை வைத்து, மணல் மூட்டைகளை உடைப்பில் போட்டு, நான்கே நாட்களில் சாலைப் போக்கு



மதுரை மாவட்டம் குளத்தூர் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த துயர் துடைப்பு முகாமில் தங்கியிருந்த மக்களுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆறுதல் கூறுகிறார்.



மாண்புமிகு தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் சென்னை வியாசர்பாடி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, 26-11-'77 அன்று ஆடைகள் வழங்கினார்.

களை இழுத்து விடலாம் என்பதால் அப்பிணங்களைத் தோண்டி எடுத்து ஆழமாகக் குழி வெட்டிப் புதைக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

''வீடுகள் இடிந்து, தானியங்கள் நாசமாகி லக்கம்பட்டி கோரமாகக் காட்சி அளித்தது.

**அதிகாரிகளின் சாதனை !**

''பிறகு வேடசந்தூருக்குப் போய்ச் சேர்ந்தோம். வேடசந்தூரில் உயிருக்குச் சேதமில்லை. வெள்ளத்திற்குப் பிறகு அன்று தான் வேடசந்தூருக்குச் செல்ல முடிந்தது.

''பிரதான சாலையிலிருந்து வேடசந்தூர் செல்லும் வழியில்

''இந்த அற்புத, அசுர சாதனைக்காக அதிகாரிகளையும், உதவிய ஊழியர்களையும், பொதுமக்களையும் எத்தனை பாராட்டினாலும் தகும்.

''வேடசந்தூர் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமிற்குச் சென்று வீடிழந்தவர்களுக்கு நிதி உதவி, உடை ஆகியவற்றை வழங்கினோம்.

''திண்டுக்கல்லுக்கும் மணப்பாறைக்கும் இடையே இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒரு பாலம் உடைந்து, திண்டுக்கல்—திருச்சி சாலைப் போக்குவரத்துத் தடைப்பட்டது.

''அப்பாலத்தின் இரு பக்கமும் பஸ்கள் நிற்கும் பாலத்தில் ஓடிய

வரத்தை அவர்கள் சரி செய்தனர்.

''இது அற்புதச் சாதனை. பாராட்டப்பட வேண்டிய பணி.

**நெஞ்சைவிட்டு அகலாத சோகக் காட்சிகள் !**

''பிறகு கோரச் சேதங்களுக்கு ஆளான குடவனூற்று அணைப் பகுதிக்குப் போய்ச் சேர்ந்தோம். அணை முற்றிலும் நாசமடைந்து இருந்தது.

''குளத்தூர் முகாமில் கணவனையும் இரண்டு பிள்ளைகளையும் இழந்து பிரமை பிடித்த நிலையில் இருந்த ஒரு தாயின் சோக உருவம் இன்னும் என் நெஞ்சை விட்டு அகல மறுக்கிறது.

''தும்மக் குண்டில் இரண்டு சிறுவர்கள் தாய், தந்தையர் உற்றார், உறவினர் அனைவரையும் இழந்து அனாதையானார்கள். இவர்களுக்கு காந்தி கிராமம் அடைக்கலம் கொடுத்துள்ளது.

''இவ்வூரில் ஒரு கம்பியைப் பிடித்துக் கொண்டே 25, 30 பேர் வெள்ளத்திலிருந்து தப்பிய விவரம் கேட்டபோது திரமிக்க நிகழ்ச்சியின் வியப்பாக இருந்தது.

''மாரம்பாடியில் கேட்ட கதைகள்.....அப்பப்பா.....கும்மிருட்டு.....வெள்ளம் சூழ்ந்தது. சர்ச் பாதிரியார் சர்ச் மணியை அடிக்க அந்த ஒலி கேட்டு அந்த திசையில் ஓடிய மக்கள் தாங்கள் பிழைத்த கதையைச் சொன்னார்கள். பாதிரியார் ஜான் பீட்டரை இவ்வூர் மக்கள் எப்போதும் மறக்க மாட்டார்கள்.

'' ரூ. 26 ஆயிரம் செலவில் கட்டப்பட்டு, திறக்கவே படாத ஒரு புத்தம் புதிய பள்ளிக் கட்டடம் தரை மட்டமானது.

''எங்கும் சோகம் நிலவியது! பெரிய பெரிய விவசாயிகள்கூட அனைத்தையும் இழந்து பஞ்சையாகி விட்டனர்.

''உணவுப் பொட்டலம் வாங்க வரிசையில் நின்று கொண்டு



வேடசந்தூர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு தமிழக ஊள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் துயர் துடைப்புக்கான பணம் வழங்கினார்.

இருந்த ஒருவரை என்னிடம் சுட்டிக்காட்டி ''இவர் 35 ஏக்கருக்குச் சொந்தக்காரர்; இரண்டு மூன்று ஆண்டிற்கான தானியம் இவர் வீட்டில் எப்போதும் இருக்கும். இவர் வீட்டிற்கு ஒரு வேளைக்கு 25, 30 விருந்தாளிகளாவது வருவார்கள். இன்று சோற்றுப் பொட்டலத்திற்காகக் கையேந்தி 'கியூ' வரிசையில் நிற்கிறார்'' என்று சொன்னதைக் கேட்டு என் இதயமே வெடித்து விடும்போல இருந்தது.

''தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நிவாரணப் பணிகளினால் மக்கள் தற்போது நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கியுள்ளனர்.

''மக்கள் அனைவரும் அரசின் தீவிர நிவாரணப் பணிகளைக் கண்டு மன ஆறுதல் அடைந்து உள்ளார்கள். அரசிற்கு ஆதரவாக இருக்கிறார்கள். மக்களைத் துயர வெள்ளம் சூழ்ந்துள்ள இந்த நேரத்தில் அரசு அதிகாரிகள் ஆற்றிவரும் அரும்பணி பாராட்டுக்குரியது'' என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் கூறினார்.

## இரண்டரை கோடி ரூபாய் மதிப்புள்ள கால்நடைகள் இறந்தன!

''தமிழ் நாட்டில் வீசிய புயல், பெரு வெள்ளம் காரணமாக 2 கோடியே 56 இலட்சத்து 6 ஆயிரத்து 525 ரூபாய் மதிப்பு உள்ள கால்நடைகள் மரித்து விட்டன'' என்று **மாண்புமிகு தமிழக சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் தெரிவித்துள்ளார்.**

''25 ஆயிரத்து 102 பசு, காளை மாடுகள் இந்த வெள்ளத்திற்குப் பலியாகிவிட்டன என்று இது வரை கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிகிறது. இவற்றின் மதிப்பு 2 கோடியே 51 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் இஆகும்.

''செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி ஆகியவை 7,606 மரித்து விட்டன. இவற்றின் மதிப்பு ரூ. 4 இலட்சத்து 56 ஆயிரத்து 360. கோழி, சேவல், வாத்து ஆகியவை 9 ஆயிரத்து 633 இறந்து இறந்துவிட்டன. இவற்றின் மதிப்பு ரூ. 48 ஆயிரத்து 168'' என்ற புள்ளி விவரங்களை அவர் தந்தார்.

கால்நடைகள், கோழி, வாத்து போன்றவை இந்தப் புயலில் பலியானது பற்றிய கணக்கெடுப்பை புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று கால்நடைத் துறை அதிகாரிகள் சேகரித்து வருகிறார்கள். இந்த முழு கணக்கும் தெரிந்த பிறகுதான் முழு விவரம் தெரியும் என்றும் அவர் கூறினார்.

## ஆஸ்திரேலியாவில் இருந்து உயர்ரக பசுமாடுகள் விமானத்தில் வருகின்றன !

அதிக பால் கொடுக்கும் உயர்ந்த ரக பசு மாடுகள் ஆஸ்திரேலியாவில் இருந்து, தமிழ்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த மாடுகள் விமானத்தில் கொண்டு வரப்படுகின்றன.

''தமிழ் நாட்டில் நிறைய பால் கொடுக்கும் உயர் ஜாதி மாடுகளை உருவாக்குவதற்காக, ஆஸ்திரேலியா நாட்டில் இருந்து ''ஜெர்சி'' இனப் பசுக்கள் 240ம், காளைகள் 10ம் விமானம் மூலம் கொண்டு வந்து, தஞ்சை மாவட்டம் ஈச்சங் கோட்டை கால்நடைப் பண்ணையில் வைக்கப்படும்.

''அதன் முதல் தவணையாக, 5-12-'77 அன்று, 50 பசுக்களும், 2 காளைகளும் வருகின்றன. அந்த மாடுகள் தினம் ஒன்றுக்கு அதிக பட்சம் 25 லிட்டர் பால் கொடுக்கும்.''

''ஓசூர் கால்நடைப் பண்ணையில் 3 கோடி ரூபாய்ச் செலவில் சிந்திப் பசுப் பண்ணை விரிவுபடுத்தப்படும்.

''அங்குள்ள குதிரைப் பண்ணையில், போலீசாருக்குகாக உயர்ந்த ஜாதிக் குதிரைகள் உருவாக்கப்படும்.''

**இவ்வாறு மாண்புமிகு தமிழக சமூக நலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் கூறினார்.**




# படமும் செய்தியும்

பாரதத்தின் முன்னாள் பிரதமர் திரு ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள் விழா, குழந்தைகள் நாள் விழாவாக 12—11—1977 முதல் 14—11—1977 வரை சென்னையில் நடைபெற்றது. இவ்விழாவின் முதல் நிகழ்ச்சியான சிறுவர்களுக்கான திரைப்படக் காட்சியை, மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், 12—11—1977 அன்று காலை, கலைவாணர் அரங்கில் துவக்கி வைத்து உரையாற்றினர்



குழந்தைகள் நாள் விழாவை முன்னிட்டு மாண்புமிகு தமிழக சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் சென்னையில் உள்ள மருத்துவ மனைகளுக்குச் சென்று, சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினர்.



நேரு பிறந்த நாள் விழாவையொட்டி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 14—11—1977 அன்று நடைபெற்ற பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகளில் பங்குபெற்ற குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழகப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் பரிசு அளித்தார்.



குழந்தைகள் நாள் விழாவை முன்னிட்டு அனைத்து இந்திய வானொலியின் சென்னை நிலையம், 12—11—1977 அன்று, வள்ளுவர் கோட்டத்தில் சிறுவர்களுக்கான சிறப்புக் கலை நிகழ்ச்சியை நடத்தியது. இக்கலை விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமை வகித்தார்.

''கப்பலோட்டிய தமிழன்'' வ. உ. சிதம்பரனாரின் நினைவு நாளையொட்டி, 18—11—1977 அன்று காலை 7.00 மணி அளவில், சென்னைத் துறைமுக வாயிலில் உள்ள வ. உ. சி. அவர்களின் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் மாலை அணிவித்தார்.



குழந்தைகள் நாள் விழாவையொட்டிச் சென்னையில் நடைபெற்ற குழந்தைகள் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழக சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் பரிசுகள் வழங்கினார்.





புதுடில்லியில் தற்பொழுது நடைபெற்று வரும் வேளாண்மைப் பொருட்காட்சியில் (Agri—Expo—77), 22.11.1977 அன்று, ''தமிழ்நாடு நாள்'' கொண்டாடப் பெற்றது. ''தமிழ்நாடு நாள்'' விழாவை மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு சரண்சிங் அவர்கள் துவக்கி வைத்தார்.

''தமிழ்நாடு நாள்'' விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு சரண்சிங் அவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கினார். மாண்புமிகு தமிழக செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களும் அருகே உள்ளார்.





புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக பகுதிகளைப் பார்வையிடுவதற்காக, 25-11-1977 அன்று, சென்னைக்கு வருகை தந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களை, மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் சென்னை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

வரலாறு காணாத வகையில் புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக பகுதிகளை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள், 25-11-1977 அன்று, விமானம் மூலம் பார்வையிட்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுட்டிக் காட்டி விளக்கினார்.







சோவியத் நாட்டு 'போல்ஷாய்த் தியேட்டர்' பாலே நடனக் குழுவினர், 20—11—1977 அன்று, சென்னை 'மியூசிக் அகாடெமி' தியேட்டரில் கலைநிகழ்ச்சி நடத்தினர். அந்நிகழ்ச்சியின் முடிவில், சோவியத் நாட்டுக் கலாச்சார அமைச்சர் திரு. வி.ஐ.பாபோவ் அவர்களுக்கும், பாலே நடனக் குழுவினருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர், அவர்கள் நினைவுச் சின்னம் வழங்கினார்.

# நீந்திச் சென்றார்!

# நிவாரணப் பணி

# செய்தார்!



**வெ**ள்ளம் சூழ்ந்து, தீவுபோல் ஆன கிராமங்களுக்கு மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் திரு இராகவானந்தம் அவர்கள் நீந்திச் சென்று நிவாரணப் பணிகளைக் கவனித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தஞ்சை மாவட்ட வெள்ளப்பகுதிகளைப் பார்வையிட்டு நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் சென்றிருந்தார்.

கல்லாறு, தீச்சங்குப்பம், அக்கறைப்பேட்டை ஆகிய கிராமங்கள் வெள்ளம் சூழ்ந்து தீவுகள் போல இருந்தன.

ஆள் உயரத்துக்கு மேல் இருந்த தண்ணீரில் அமைச்சர் நீந்தி, அந்தக் கிராமங்களுக்குச் சென்றார்.

வெள்ளப் பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்க அமைச்சர் ஏற்பாடு செய்தார்.

புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்கள் கோரிக்கைகளைக் கேட்டறிந்து அவற்றை உடனுக்குடன் நிறைவேற்றினார்.

வீடு இழந்த மக்களுக்குத் தாமதம் இன்றி உடனுக்குடன் உணவு கிடைக்க ஏற்பாடு செய்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குறைகளை உடனுக்குடன் கவனிக்கத் தனிப் பிரிவு ஒன்றை நாகப்பட்டினத்தில் அமைத்து, நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்தினார்.

அரிசி, மண்ணெண்ணெய் வேண்டுமானால் ஏற்பாடு செய்வது போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பது, மருத்துவ வசதிகளைச் செய்து கொடுப்பது போன்ற பணிகளை இந்தத் தனிப் பிரிவு ஆற்றி வருகிறது. இந்த தனிப் பிரிவில் உள்ள அதிகாரிகளும் ஊழியர்களும் இரவு பகலாக 24 மணி நேரமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகளைக் கவனித்துப் பணியாற்றி வருகிறார்கள்.

ஆங்காங்கே கிராமங்களில் தங்கியிருக்கும் மக்கள் சமைத்துச் சாப்பிட இரண்டு, மூன்று மூட்டை அரிசி, மண்ணெண்ணெய் ஆகியவற்றை வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்தார்.



சென்னை வியாசர்பாடி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், 26-11-1977 அன்று உடைகள் வழங்கினர்.

தஞ்சை மாவட்டத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி, துயர்துடைப்புப் பணிகளைத் துரிதமாக நடைபெறச் செய்துவிட்டு, சென்னை திரும்பியுள்ள மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் அவர்கள் கூறியதாவது:

''ஜீப்பில் போக முடிந்த இடங்களுக்கு ஜீப்பில் போய்ப் பார்த்தேன். வெள்ளம் இருந்த இடங்களில் நீந்திச் சென்று பார்த்தேன். இடுப்பு வரை தண்ணீர் உள்ள இடங்களில் நடந்தே சென்று பார்த்தேன். வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட எல்லாக் கிராமங்களுக்கும் சென்று பார்த்தேன்.

''மின்சார 'டிரான்ஸ்பார்மர்கள்' புயல் காற்றில் சாய்ந்து விழுந்து விட்டன. மின்சாரக் கம்பங்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன.

''தஞ்சை மாவட்டத்தில் மட்டும் பள்ளிக்கூடங்களுக்குப் புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதம் ரூ. 14 இலட்சமாகும். இவற்றில் 36 பள்ளிகள் அரசினர் தொடக்கப் பள்ளி உயர்நிலைப் பள்ளி போன்றவையாகும். 18 பள்ளிகள் அரசின் உதவி பெற்ற பள்ளிகளாகும்.

''நாகப்பட்டினத்தில் மட்டும் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் மதிப்பு ரூ. 6 இலட்சமாகும். பல இடங்களில் பள்ளிகளின் கட்டடம் இடிந்து போயிருக்கின்றன. சில இடங்களில் கூரைகள் சாய்ந்தும் கிடக்கின்றன.

''வேளாங்கண்ணியில் 1,000 மீனவர் குடிசைகள் சேதமாகி விட்டன. வீடிழந்த மீனவர்களைப் பார்த்து ஆறுதல் கூறினேன். அவர்களுக்குக் கணிசமான அளவுக்கு நிவாரணத் தொகையை அரசு அளிக்கும். புயலால் வேளாங்கண்ணி கோயிலும் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் வெள்ள நிவாரணப் பணிகளை வேளாங்கண்ணி பாதிரியார் பெரிதும் பாராட்டினர்.

''தஞ்சை மாவட்டத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்டுள்ள மொத்தச் சேதம் கோடிக்கணக்கில் இருக்கும்!'' என்று மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூறினர்.

## புயலால் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு இலவச அரிசி !

புயலால் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்குத் தமிழக அரசு இலவசமாக அரிசி வழங்குகிறது.

தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் சென்னை, தென் ஆர்க்காடு, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஏறத்தாழ 50 ஆயிரம் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

15 நாட்களுக்கு மேல் தொடர்ந்து மழை பெய்ததாலும், கடலில் கொந்தளிப்பு இருந்ததாலும் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியவில்லை.

இதனால் அவர்களுக்கு வருமானம் இல்லை.

புயலால் பாதிக்கப்பட்ட இந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்ய முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகையில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

ஊரக மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசி வழங்கப்படும்.

**



# மத்திய அமைச்சர்கள் அளித்த பாராட்டுகள்!

## மத்திய இரசாயனத் துறை அமைச்சர் அளித்த பாராட்டு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய அரசின் சார்பில் பார்வையிட்ட மாண்புமிகு மத்திய இரசாயன அமைச்சர் திரு பகுகுணா அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தமிழ்நாட்டில் 6 மாவட்டங்களில் புயல், வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதத்திலிருந்து அதை மீட்டு, புதிதாக அமைக்கும் பணி, அனைத்திந்திய மட்டத்தில் தேசிய அளவில் செய்யப்பட வேண்டும்.

இந்த முயற்சியில் தமிழக அரசுடன் தோளோடு தோளாக நின்று மத்திய அரசு தேவையான உதவிகளைச் செய்து கொடுக்கும்.

ஏற்பட்டிருக்கின்ற சேதங்கள் திகைக்க வைக்கின்றன. சேத விவரங்களை மதிப்பீடு செய்ய மத்திய நிபுணர் குழுவை மத்திய அரசு விரைவில் அனுப்பி வைக்கும்.

பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உதவவும், துயர்துடைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் தமிழக அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் முனைப்பாகச் செய்துள்ளது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

ஒரு மாநில அரசு, தன்னால் செய்யக்கூடிய அனைத்தையும் அது செய்துள்ளது.

மத்திய அரசின் சார்பிலும், மாண்புமிகு பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் சார்பிலும் பாதிப்புக்கு ஆளாகி உள்ள மக்களுக்கு ஆறுதல் கூறிக் கொள்கிறேன்.

எளிதில் போக்க முடியாத, அழிக்க முடியாத இந்த அழிவின் வடுவை மாற்றி இந்த மாநிலத்தைப் புதிதாக நிர்மாணிக்க, தமிழக அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்துக்கும் மத்திய அரசு உதவும். உறுதுணையாக நிற்கும்.

மாண்புமிகு நிதியமைச்சர் திரு மனோகரன் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு பொன்னையன் அவர்களும் தமிழ்நாட்டில் சாலைப்போக்குவரத்து, செய்தித் தொடர்பு துண்டிப்பு ஏற்பட்டுள்ள விவரங்களை என்னிடம் எடுத்துக் கூறினார்கள். உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் எவ்வளவு ஏற்பட்டுள்ளது என்று இப்போது மதிப்பிட்டுக் கூறமுடியாது.

புயல் வீசி முடிந்து, வெள்ளம் வடிந்த பிறகு பரவும் தொத்து நோய்களைத் தடுப்பது போன்ற முன்னேற்பாடான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டி

யது அவசியம். இவை அனைத்தையும் போர்க்கால நடவடிக்கை போல மேற்கொள்ள வேண்டி உள்ளது.

இந்தச் சோதனையிலிருந்து தமிழக, புதுவை மாநில அரசுகள் மீண்டு, விரைவில் வெற்றி பெறும் என்று நம்புகிறேன்.

துயர் துடைப்புப் பணிகளை நிறைவேற்றுவதில் தமிழக அரசு சற்று மெத்தனமாக நடந்து கொண்டதாகச் ''சிலர்'' கூறுகிறார்களே என்று மத்திய அமைச்சர் பகுகுணாவிடம் ஒரு நிருபர் கேட்ட போது **"இதைவிட வேறு என்ன செய்திருக்க முடியும் என்று கருதுகிறீர்கள்? சாத்தியமான எல்லாவற்றையும் மாநில அரசும், மத்திய அரசும் செய்துள்ளன" என்று திரு பகுகுணா கூறினார்.**

---

## மத்திய மின்துறை அமைச்சர் அளித்த பாராட்டு

''மாநில அரசு சார்பில் எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் அனைத்தும் சரியானவையே. அதிகாரிகள் மிகச் சிறப்பான முறையில் நிவாரண வேலைகளைச் செய்து வருகிறார்கள். இது போன்ற சந்தர்ப்பங்களில் சில குறைகள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்யும். அனைவரையும் திருப்திப்படுத்திவிட முடியாது. எனவே அதைக் குறையாகக் கூறக் கூடாது.

நிவாரணப் பணிகளை சீர்குலைக்கும் வகையில் யாருடைய பேச்சோ, செயல்களோ இருக்கக் கூடாது.

நான் பொறுப்பு வகிக்கும் இலாகாவைச் சேர்ந்த நெய்வேலி, சிங்கரேணி, கோல் இந்தியா போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் சார்பாக முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு ரூ. 10 இலட்சம் நன்கொடை அளிக்கிறோம். இது முதல்படி தான்.

நாங்கள் கொடுக்கும் ரூ. 10 இலட்சத்தில் தொழிலாளர்களின் பங்கும் சேர்ந்துள்ளது.''

---

## மத்திய பாதுகாப்பு அமைச்சர் அளித்த பாராட்டு

கடும் புயலாலும், கடுமையான மழையாலும் பாதிக்கப்பட்ட தமிழகப் பகுதிகளை மாண்புமிகு மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் 26-11-1977 அன்று தனி விமானம் மூலம் சுற்றிப் பார்த்தார்கள்.

மாண்புமிகு மைய எரிபொருள் அமைச்சர் திரு பி. ராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை

## மத்திய இரயில்வே அமைச்சர் அளித்த உறுதி!

**"சுதந்தரத்திற்குப் பிறகு தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய இயற்கை உற்பாதமாகும்"** என்று தமிழ்நாட்டில் புயல், வெள்ளங்களினால் ஏற்பட்டுள்ள பெரும் சேதத்தைப் பற்றி மாண்புமிகு மத்திய இரயில்வே அமைச்சர் திரு மது தண்டவதே 17-11-1977 அன்று விவரித்தார். தமிழ்நாட்டுக்கு நிவாரணம் அளிப்பதில் நிதி ஒரு தடையாயிராது என்று மத்திய அரசு சார்பில் தமிழ்நாட்டு மக்களுக்கு அவர் உறுதி அளித்தார். இந்தத் துயரத்திலிருந்து தமிழ்நாடு காப்பாற்றப்பட வேண்டும். தமிழ்நாடு காப்பாற்றப்பட்டால் இந்தியாவின் மற்றப் பகுதிகளும் காப்பாற்றப்படும் என்று கூறினார்

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் சேதம் பற்றி பிரதம மந்திரிக்கும், நிதி மந்திரிக்கும் தெரிவிப்பதாயும், தமிழ்நாட்டுக்கு மத்திய உதவி கிடைக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினார். தமிழ்நாட்டில் உள்ள நிலைமை பற்றி நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை விடுவதாயும் கூறினார்.

திருச்சி விமான நிலையத்தில் நிருபர்களிடம் பேசுகையில், தமிழ்நாட்டின் இப்போதைய வெள்ளத்திலும், புயலிலும் பெரும் உயிர்ச் சேதமும் அதிக சொத்துச் சேதமும் ஏற்பட்டிருப்பது பற்றி தம்முடைய வருத்தத்தை தண்டவதே தெரிவித்துக் கொண்டார்.

தமிழ்நாட்டில் 25,000 முதல் 30,000 இரயில்வே ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார். இவர்களில் பெரும்பாலோர் கலாசிகள். பாதிக்கப்பட்டுள்ள இரயில்வே ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைகளை விவரித்தார். பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்குத் தலா ரூ. 200 முன்பணம் வழங்க தென் ரயில்வே பொது மேலாளர் ஏற்கெனவே அனுமதி வழங்கியிருக்கிறார். இது தவிர இரயில்வே அமைச்சரின் நிவாரண நிதி, மற்ற நல நிதியிலிருந்து தாம் ரூ. 1 இலட்சம் அனுமதித்திருப்பதாக அமைச்சர் கூறினார். இரயில் ஊழியர்களுக்கு இனாம் தொகையாக இது வழங்கப்படும்.

## குடிசை கட்டும் சாதனங்கள் அத்தியாவசியப் பொருட்கள் எனப் பிரகடனம்!

குடிசைகள் கட்டுவதற்கான தென்னந்தட்டிகள், பனந்தட்டிகள், சவுக்குக் கம்புகள், மூங்கில் மரங்கள், கயிறுகள் ஆகிய ஐந்து பொருள்களையும் அத்தியாவசியப் பொருள்கள் எனத் தமிழ்நாடு அரசு பிரகடனம் செய்திருக்கிறது.

தமிழ்நாடு அத்தியாவசியப் பொருள் கட்டுப்பாடு, ஆர்ஜிதச் (தற்காலிக அதிகார) சட்டத்தின் கீழ், இவை அத்தியாவசியப் பொருள்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்களும் உடன் சென்றனர்.



நாடாளுமன்ற வெள்ள நிவாரணக்குழு உறுப்பினர்கள் நால்வரும் மத்திய பாதுகாப்பு அமைச்சர் அவர்களுடன், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர்.

வெள்ளச் சேதப் பகுதிகளை விமான மூலம் சுற்றிப் பார்த்த மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள், ஆளுநர் மாளிகையில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

''பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட பொது நிறுவனங்களிடமிருந்து ரூ. *10* இலட்சம் **'முதல் அமைச்சர் வெள்ள நிவாரண நிதி'**க்கு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**''தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நிவாரணப் பணிகள் பிரமாதமாக பாராட்டும் படியாகச் செய்திருக்கிறார்கள்.**

''தமிழ்நாட்டில் ராணுவம் பாராட்டும்படி நடந்துள்ளது உங்களுக்குத் தெரியும்.

''இன்று காலை, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானம் மூலம் சுற்றிப் பார்த்தேன். **நிவாரண நடவடிக்கைகளைப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு அரசு செய்திருக்கிறது.**

இவ்வாறு மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் கூறினார்.

திரு ஜெகஜீவன்ராம் பேட்டி அளித்தபோது மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்களும் உடன் இருந்தனர்.



# மின்னல் வேகத்தில் மின்சாரத் தொடர்புகள் சீரமைக்கப்பட்டன!

தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட புயல்—வெள்ளத்தினால், தமிழக மின்சார வாரியத்திற்கு ஏறத்தாழ 4.0 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

புயல்-வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரக் கம்பங்கள் விழுந்ததன் காரணமாகவும், 'டிரான்ஸ்பார்மர்'கள் கீழே சாய்ந்து பாழ்பட்டதன் காரணமாகவும் கடந்த 11—11—1977, 12—11—1977 ஆகிய இரு நாட்களில் மின்சாரத் தொடர்பு அறவே இல்லாமல், கிராமங்களும் நகரங்களும் இரவில் இருண்டு கிடந்தன!

தமிழகத்தில் புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், புயலுக்கு முன்பு 7,300 'டிரான்ஸ்பார்மர்'கள் இயங்கியுள்ளன. அவைகளில் 5,402 'டிரான்ஸ்பார்மர்'கள் அதாவது 74 சதவிகித 'டிரான்ஸ்பார்மர்'கள் நவம்பர் 11, 12 ஆகிய தேதிகளில் வீசிய கொடும் புயலால் நிலைகுலைந்து, பாதிக்கப்பட்டு, இயங்கவில்லை என்று 13—11—1977 அன்று தெரியவந்தது.

பாழ்பட்ட 'டிரான்ஸ்புார்மர்'களைச் சீரமைத்து மீண்டும் மின்சாரத் தொடர்பை அளித்திடுவதற்கு மின்சார வாரியத்தின் பணியாளர்கள் இரவு பகலெனப் பாராமல்—கொட்டும் மழையையும் குளிரையும் பொருட்படுத்தாமல்—மின்னல் வேகத்தில் பணியாற்றினார்கள்! அதன் பயனாய், 5,402 ஆக இருந்த பாழ்பட்ட 'டிரான்ஸ்பார்மர்'களின் எண்ணிக்கை 10 நாளில் 759 ஆகக் குறைந்தன! அந்தப் பத்து நாளில் படிப்படியாக ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பின்கண்ட அட்டவணையில் இருந்து அறிந்து கொள்ளலாம்:

| நாள் (1) | பழுதுபட்டு இருந்த டிரான்ஸ்பார்மர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் (2) | சீரமைக்கப்பட்ட டிரான்ஸ்பார்மர்களின் தொடர் முன்னேற்றச் சதவீதம் (3) |
|---|---|---|
| 13—11—1977 | 5,402 (74%) | — |
| 15—11—1977 | 4,944 (67.7%) | 6.3% |
| 17—11—1977 | 2,473 (33.9%) | 40.1% |
| 19—11—1977 | 1,391 (19.0%) | 55.0% |
| 21—11—1977 | 880 (12.0%) | 62.0% |
| 23—11—1977 | 759 (10.4%) | 10.4% |

**பல நாட்கள் பாடுபட்டு அமைத்த 'டிரான்ஸ்பார்மர்'களை ஓரிரு நாட்களில் புயல் பாழ்படுத்தியது! ஆனால் மின்சார வாரியப் பணியாளர்களோ அவைகளை 15 நாட்களுக்குள் மீண்டும் பழைய நிலைக்குச் சீரமைத்து விட்டனர்!**



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரிசன நல அமைச்சர் ஆற்றிய பணிகள்!

கோடும் புயலாலும் கொடிய வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கு ஏற்ப, மாண்புமிகு தமிழக அரிசன நல அமைச்சர் திரு சௌந்தர பாண்டியன் அவர்கள் வெள்ளப் பகுதிகளில் நவம்பர் 12-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை சுற்றுப் பயணம் செய்து, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் கிடைக்கச் செய்தார். இந்த 7 நாட்களில் அவர் மணப்பாறை, பழனி, வேடசந்தூர், கரூர், குளித்தலை, திருச்சி, முசிறி ஆகிய வட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார்.

திருச்சி நகரத்திலும், வெள்ளம் பாய்ந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தார்.

திருச்சியில் சர்வகட்சித் தலைவர்களின் கூட்டத்தையும் கூட்டி அவர்களுடன் நிவாரணப் பணிகள் குறித்து விவாதித்தார்.

கரூர், குளித்தலை, மணப்பாறை திருச்சி மாவட்டங்களில் மட்டும் நூற்றுக்கணக்கான கிராமங்களுக்குச் சென்றார். கார்கள் செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் நடந்தே சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

கரூர், குளித்தலைப் பகுதிகளில் பல கிராமங்களுக்கு அவர் செல்லுகையில், தங்களுக்கு உணவுக்குக்கூட வழியில்லை என்று ஏராளமான கிராம மக்கள் அவரிடம் தெரிவித்தார்கள்.

இதைக் கேட்டதும் மனம் கலங்கிய அவர், அடனே அரிசி வியாபாரிகளை அழைத்துப் பேசி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு கேட்டார். அவர்கள் 200 மூட்டை அரிசியைஅளித்தார்கள். கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு 150 மூட்டை அரிசி கிடைக்கவும் ஏற்பாடு செய்தார். இந்த 350 மூட்டை அரிசியை அந்தப் பகுதி மக்களுக்கு வினியோகிக்கவும் ஏற்பாடு செய்தார்.

''வேடசந்தூர்ப் பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்ட கிராமங்களைப் பார்த்தேன். எங்கு பார்த்தாலும் வீடுகள் இடிந்து தரை மட்டமாகக் கிடந்தன. ஆடு, மாடுகள் இறந்து ஆங்காங்கு கிடந்தன. பாசனக் கிணறுகள் எல்லாம் வெள்ளத்தால் மண் மூடிக் கிடந்தன. விவசாயப் பயிர்களையும் மணல் மூடிக் கிடந்தது'' என்று அந்தப் பகுதியின் கோரக் காட்சி பற்றி அமைச்சர் விவரித்தார்.

''இந்தப் பகுதியில் உள்ள குடகனாறு அணையில் மூன்று இடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட அனைத்து கிராமங்களுக்கும், சென்று அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் 'செய்யும்படி அதிகாரிகளிடம் வற்புறுத்தினேன்'' என்றும் அவர் கூறினார்.

# வெள்ளத்தை முந்தும் வேகத்தில் வெள்ள நிவாரணப் பணிகள்!





வரலாறு காணாத வகையில் 12-11-1977 அன்று தமிழகத்தைத் தாக்கிய கடும் புயலாலும் பெரு வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு மோசமாகச் சேதமடைந்த தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் துயர் துடைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஐந்து ஹெலிகாப்டர்களும், ஒரு 'டகோடா' விமானமும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன. வெள்ளத்தால் சூழப்பட்டு மற்ற இடங்களுடன் தொடர்பில்லாதிருந்த கிராமங்கள் மீது இடைவிடாது பறந்து சென்று, மக்களுக்குத் தைரியமூட்டி உணவுப் பொட்டலங்களையும், ரொட்டிகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கின. சில நாட்களில் இரண்டு 'ஆவ்ரோ' விமானங்கள், சில நாட்களில் மூன்று 'அவ்ரோ' விமானங்கள் வீதம் சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு 20,000 30,000 40,000 ரொட்டித் துண்டுகளை ஒவ்வொரு நாளும் எடுத்துச் செல்லும் பணியில் மாநில அரசுக்குப் பெரிதும் உதவின. நாகப்பட்டினத்துக்கும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் ரொட்டி முதலிய உணவுப் பொட்டலங்களை எடுத்துச் செல்வதற்காக திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் லாரிகள் தொகுதி தொகுதியாகக் காத்துக் கொண்டிருந்தன. சென்னையிலிருந்து, திருச்சிராப்பள்ளிக்கும், நாகப்பட்டினத்திற்கும், புதுக்கோட்டையின் கரையோரப் பகுதிகளுக்கும் புயலாலும், வெள்ளத்தாலும் சூறையாடப்பட்ட வேடசந்தூரின் பகுதிகளுக்கும், ரொட்டி, உணவுப் பொட்டலங்கள் முதலியவற்றையும் காவல் துறை, மற்றும் இராணுவத்துறை





யினரின் வான் தந்திக் கருவிகள், மின்கலங்கள், மின் உற்பத்தி இயந்திரங்கள் ஆகிய சாதனங்களையும் கொண்டு செல்வதில் விமானப் படை ஒப்பற்ற வகையில் பணியாற்றியது.

விமானம் ஹெலிகாப்டர்கள், முதலிய வானூர்திகளின் மூலம் மீட்புப் பணிகள் நடந்துகொண்டிருந்த அதே சமயத்தில் மாயூரம், திண்டுக்கல், புதுக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்துதொகுதி தொகுதியாக அலுவலர்கள் கிராமங்களுக்கு விரைந்து சென்று சாலைகளைச் சீர் செய்து, திக்கற்ற நிலையில் விடப்பட்டிருந்த மக்களைச் சந்தித்து, ஆறுதல் கூறியும், அவர்களுக்கு வேண்டும் உணவுகளை வழங்கியும் தைரிய மூட்டினர். உணவு வழங்கு நிலையங்களையும், அவர்கள் ஆங்காங்கே ஏற்பாடு செய்தார்கள்.

புயல் இரண்டாவது முறை தாக்கக்கூடும் என்ற அச்சமிருந்ததால், விமானங்கள் தொடர்ந்து வைத்துக் கொள்ளப்பட்டன. ஆனல், இரண்டாவது முறை புயல் வீசக்கூடிய அச்சம் நீங்கி விடவே விமானங்கள், பின்னர் அவற்றின் தளங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. ஆயினும் நாகப்பட்டினம் பகுதியில் வான் தந்திக் கருவிகள், வாகனங்கள் போன்ற இராணுவச் சாதனங்களை அரசு இன்னும் சிறிது காலத்திற்குப் பயன்படுத்திக்கொள்வதற்காக வைத்துக் கொண்டுள்ளது.

இத்தகைய சோதனையான சூழ்நிலைகளில் சில நடவடிக்கைகளுக்கு முதலிடம் தருவதோடு, சில நடவடிக்கைகள் ஒரே சமயத்தில் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வெள்ளத்தால் சூழப்பட்டு அவதியுறுகிறவர்களை முதலில் மீட்டு, பாதுகாப்பான இடங்களுக்குக்கொண்டு சென்று அவர்களைத் தங்கவைத்து உணவளிக்கப்பட்டது. சாலைப் போக்குவரத்து சீர் செய்யப்படுகிற வரையில் இந்த மீட்புப்பணி காத்திருக்க முடியாதென்பதால் விமானத்திலிருந்து உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு உணவு வழங்கி பாதுகாப்பான இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்வதற்காக இராணுவப் படகுகளை மாநில அதிகாரிகள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

மின் வசதியையும், நீர் வழங்கு வசதியையும் மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பது அடுத்த பணியாகும்.

மூன்றுவதாக, அதே சமயத்தில் சாலைத் தொடர்பையும், இரயில் தொடர்பையும் செய்தித் தொடர்பையும் மீண்டும் ஆங்காங்கே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருந்தது. இவற்றில், சாலைகளைச் சீரமைக்கும் பணிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு, வெள்ளத்தாலும், புயலாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வுக்கான வசதிகள் செய்து கொடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் கருணை மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

உழவு மாடுகள் வாங்கக் கடன், அவர்கள் ஈடுபட்டிருந்த தொழிலை மீண்டும் நடத்துவதற்குக் கடன் முதலியவகைகளில்அவர்களுக்குத் தக்க உதவி செய்யவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டப் பணி முடிவுற்றது. வெள்ளத்தால் சூழப்பட்டு அல்லலுற்றவர்கள் மீட்கப்பட்டனர். முதல் சில நாட்களில் படகுகள், சாலை, விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் கொண்டு செல்லப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டன. பெரும்பாலும், எல்லாக் கிராமங்களிலும் மின்வசதி மீண்டும் ஏற்படுத்தப்பட்டு விட்டது. சாலைத் தொடர்புகளும் சீரமைக்கப்பட்டன. நூற்றுக் கணக்கில் உணவு வழங்கும் இடங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதிகாரிகள், தொகுதி தொகுதியாக ஒவ்வொரு கிராமத்திலும் பணியாற்றி வருகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறு



தல் கூறியும், உணவு குடிநீர், மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பண்டங்கள் ஆகியவற்றை அதிகாரிகள் வழங்கியும் வருகின்றனர். மாவட்ட நிர்வாகப் பணி அலுவலர்கள் அனைவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றிய வண்ணம் உள்ளனர்.

மாநில அரசின் மூன்று அமைச்சர்கள் நிவாரண ஏற்பாடுகளை நேரில் மேற்பார்வையிட்டு வருகின்றனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம், நவம்பர் 16-ஆம் தேதி முதல், நாகப்பட்டினத்தில் இருந்து கொண்டு நிவாரணப் பணிகளுக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். மாநில அரசுக்கு உதவி வரும் இராணுவ வண்டிகளோடு வீட்டு வசதி வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் முதலிய துறைகளிலிருந்து ஏராளமான வண்டிகளை அமைச்சர் அவர்கள் அனுப்பச் சொல்லி அவைகளும் விரைவில் வந்தன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு. கையழுத்தப் பம்புகளுடன் அந்த வண்டிகள் உடனே விரைந்தன. எல்லா கிராமங்களுக்கும், அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிக் குழுக்கள் மூலமாக உணவு வழங்கப்படுவதையும், பிற உதவிகள் அளிக்கப்படுவதையும் அமைச்சர் நேரடியாக மேற்பார்வையிட்டார்.



நாகப்பட்டிணம் அருகில் உள்ள சடையங் கோட்டம் என்ற ஊர் வெள்ளத்தில் மூழ்கியது. அக்கிராம மக்கள் படகின் மூலம் பாதுகாக்கப்பட்டனர்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வேடசந்தூர்ப் பகுதியில் நிறைவேற்றப்படும் நிவாரணப் பணிகள் அனைத்திற்கும் முழுப் பொறுப்பு வகித்து வருகிறார். மாவட்ட ஆட்சியாளருடன் அமைச்சர் அவர்கள் குடகனாற்றின் நெடுக உள்ள கிராமங்கள் எல்லாவற்றிற்கும் சென்று மீட்புப் பணிகளை நேரடியாகக் கவனித்து வருகிறார். இந்த ஆற்றில் தண்ணீர் பெரும்பாலும் ஓடுவது இல்லை. அத்தகைய ஆற்றில் இதற்கு முன் காணாத அளவுக்கு ஓரிரவுக்குள்ளாக வெள்ளநீர் அதிகமாக நிறைந்து விட்டது. இதனால் மக்கள் எதிர்பாராத வகையில் வெள்ளத்தால் தாக்குண்டனர்.

வேடசந்தூரில் ஆற்றின் குறுக்காக உள்ள பாலத்தின் மேல் தளம் ஆற்றுப்படுகைக்குச் சுமார் 10 அடி மேலே உள்ளது. ஆற்றுப் படுகையிலுள்ள தொலைபேசிக் கம்பங்கள், மின்சாரக் கம்பங்கள் மீதுள்ள நீர்மட்டக் குறிகளிலிருந்து பாலத்தின் தளத்திற்கு மேல் 7 அடி முதல் 8 அடி வரையில் வெள்ளம் ஓடியதாகத் தெரிய வருகிறது. இந்த ஆற்றில் இதற்கு முன் கண்டிராத அளவிற்கு நீர் பெருகியதால் சுற்றுப் புறத்தில் உள்ள 41 கிராமங்களிலுள்ள மக்கள் அதிர்ச்சியும், அச்சமும் அடைந்தனர். ஒரு சில மணி நேரங்களில் சுற்றிலும் உள்ள எல்லா இடங்களும் பெரும் சேதத்திற்குள்ளாயின. ஆடவரும் பெண்டிரும், சிறார்களும் அடித்துச் செல்லப்பட்டனர். கால்நடைகளும் அடித்துச் செல்லப்பட்டன. குடகனாற்றின் கிளையாறுகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்தோடியதன் விளைவாகவே பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. அணை உடைப்பெடுத்து விட்டதாலேயே அந்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதாகக் கூறுவதற்கில்லை. வேடசந்தூரின் நீரோட்டத் திசையில் சுமார் 7 மைல் தொலைவில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு பி. சௌந்தரப் பாண்டியன் அவர்கள், திருச்சிராப்பள்ளியில் இருந்து கொண்டு திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை மாவட்டங்களில் நிறைவேற்றப்படும் வெள்ள நிவாரணப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

### முன்னேற்பாட்டினால் பலர் காப்பாற்றப்பட்டனர் !

நாகப்பட்டினம் புயலால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. ஆனால், இது முன்கூட்டியே சிறிது எதிர்பார்க்கப் பட்டதால், முந்திய நாளன்றே மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். வீடுகள் புயலின் வேகத்தில் இடிந்து சிதறிப் பாழாயின. புயலின் விளைவாக இப்பகுதியில் சேதங்கள் ஏற்பட்ட பிறகு, வீடுகள் எங்குள்ளன, சாலைகள் எங்குள்ளன என்று பிரித்தறிய முடியாத நிலைதான் நிலவியது. மரணமுற்றவர்களின் எண்ணிக்கை சொற்பமே. மக்கள் முன்கூட்டியே வேறிடங்களுக்குப் பெயர்ந்து சென்றதால் பலர் காப்பாற்றப்பட்டனர்.

திருச்சிராப்பள்ளி அல்லது வேடசந்தூர் வெள்ளத்தைப் பொறுத்தவரையில் அது எதிர்பாராமல் நடந்து விட்டது. மக்களை வேறிடங்களுக்கு அனுப்ப அவகாசமில்லாமற் போனதோடு முன்கூட்டியே எச்சரிக்கை செய்யப்படவுமில்லை.

ஆனால் கிழக்குத் தஞ்சாவூர் பகுதியைப் பொறுத்தவரையில், மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அவர்கள் வேறிடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அதன் விளைவாக மாவட்டத்தின் ஒரு பகுதி சேதமடைந்து, வடக்கே கொள்ளிடத்திலிருந்து தெற்கே வேதாரண்யம் வரையில் உள்ள பகுதி முழுவதும் பாதிக்கப்பட்ட போதிலும் வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 150 என்ற அளவோடு நின்றது.

ஒவ்வொரு நாளும் சென்னையிலிருந்து விமானத்தின் மூலம் ரொட்டிப் பொட்டலங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதே நேரத்தில், சாலை இணைப்புகள் சீர் செய்யப்பட்ட பின்னர், ரொட்டித் துண்டுகள் லாரி லாரியாக நாகப்பட்டினத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. சென்னையிலிருந்து நான்கு இலட்சம் ரொட்டித் துண்டுகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதைத் தவிர மாவட்ட அதிகாரிகள் ஆங்காங்கே உணவு வழங்கும் இடங்களை ஏற்படுத்தி கஞ்சி, புளிசோறு, உப்புமா முதலியன தயாரிக்கச் செய்து, வழங்கினர். புயலால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்ததாலும், சமைப்பதற்கு வேண்டிய பாத்திரங்கள், அடுப்பு முதலியவற்றை வைத்திருந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்யும் அளிக்கப்பட்டன.

மாநில அரசு கேட்டுக்கொண்டபடி, வேண்டிய இடங்களுக்கு மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல், விமான எரிபொருள், எண்ணெய் ஆகியவற்றை விரைந்து அனுப்பி வைப்பதில் இந்திய எண்ணெய்க் கழகம் (I. O. C.) பெரும் பணி புரிந்தது. இன்னமும் தொடர்ந்து பணி புரிந்து வருகிறது. சென்னையிலுள்ள இந்திய எண்ணெய்க் கழகமும், மாநில அதிகாரிகளும் சிறந்த முறையில் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். திருச்சியிலும், மதுரையிலுமுள்ள இந்திய எண்ணெய்க் கழக அதிகாரிகள் நாகப்பட்டினத்திற்கும், புதுக்கோட்டைக்கும் வண்டி வண்டியாக எரிபொருளை அனுப்பி வைக்க எப்போதுமே சித்தமாயிருந்தனர்.

திருச்சி மதுரை மாவட்ட ஆட்சியர்கள் தத்தம் மாவட்டங்களில் கவனிக்க வேண்டிய பிரச்சினைகளைக் கவனிப்பதுடன், மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் ஆகியவற்றை நாகைக்கும், புதுக்கோட்டைக்கும் அனுப்பி வைப்பதில் அலுக்காது, சலிக்காது பாடுபட்டனர். குறிப்பாகத் திருச்சி மாவட்ட அதிகாரிகள், விமான மூலமாக வந்த ரொட்டி, மருந்து, மின்கலங்கள், கம்பியில்லாத் தந்தி இணைப்புப் பெட்டிகள் முதலிய சாதனங்களை லாரி மூலமாக நாகப்பட்டினத்துக்கு அனுப்பிய வண்ணமிருந்தனர்.

திருச்சி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் பகுதிகளில் பயன்படுத்துவதற்காக 3 இலட்சத்துக்கு மேற்பட்ட காலரா தடுப்பு ஊசி மருந்துக் குப்பிகள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. மாநில அரசிடம் 5 இலட்சம் காலராத் தடுப்பு ஊசி மருந்துகள் உள்ளன. தேவைப்படும் இடங்களுக்கு மருந்துகள் விரைந்து அனுப்பி வைக்கப்படுகின்றன.

25,000 ஜோடி வேட்டி, புடவைகள் நாகப்பட்டினத்துக்கு



விரைந்து அனுப்பி வைக்கப்பட்டு, புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் மேலும் இவ்வாறே அனுப்பி வைக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்கம் இம்மாநில அரசுக்குப் பெருமளவில் கைகொடுத்து உதவி செய்தது. 1,500 படுக்கை விரிப்புகளையும், 100 பெரிய டின் பிஸ்கட்டுகளையும் தந்து உதவியது. இவையனைத்தும், நாகப்பட்டினத்திற்கும், சிதம்பரத்திற்கும் விரைந்து அனுப்பி வைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன.

## முதல் வெள்ளத்தைச் சமாளித்தோம்!

அக்டோபர் 15-ந்தேதி வாக்கில் இம்மாநிலத்தின் சில பகுதிகளில், முதன் முதலாக வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. வைகையிலும், அதன் கிளை நதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வரலாறு காணாத வகையில் ஏற்பட்ட இந்தக் கொடுமையான வெள்ளத்தில் இராமநாதபுரம் சிக்கித் திக்குமுக்காடியது. 17 கிலோ மீட்டர் நீளமுள்ள இராஜசிங்க மங்கலம் ஏரியும், இராமநாதபுரம் பெரிய ஏரியும் நிரம்பி வழிந்து, உடைப்பெடுக்குமோ என்ற அச்சமிருந்தது. அவை உடைப்பெடுத்திருந்தால் ராஜசிங்கமங்கலமும், இராமநாதபுரமும் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு அழிந்து போயிருக்கும். அதிகாரிகளும், மக்களும் சிறந்த முறையில் ஒத்துழைத்து நடவடிக்கை எடுத்ததால் இந்த அபாயம் தவிர்க்கப்பட்டது. தண்ணீர் வீணாகாமல் பெரிதும் பாதுகாக்கப்பட்டது. உயிருக்கோ உடைமைக்கோ குறைந்த அளவு சேதத்துடன் நிலைமை சமாளிக்கப்பட்டது.





வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
ரொட்டிகள் வழங்கப்படுகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி செய்யப்படுகிறது.





வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் இலவச அரிசி வழங்கினர்.



புயலின்போது வீடு இடிந்ததால் காய
முற்றவர்கள் மருத்துவ மனையில் சேர்க்
கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வரு
கின்றனர். அவர்களை மாண்புமிகு தமிழக
தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ்.
இராகவானந்தம் அவர்கள், பார்வை
யிட்டு ஆறுதல் கூறினர்.

# வீடு இழந்தவர்களுக்கு 2.36 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது!

தமிழ் நாட்டில், புயலாலும், வெள்ளத்தாலும் வீடு இழந்து தவிப்பவர்களுக்கு அரசாங்கம் பல விதங்களிலும் உதவி செய்து வருகிறது.

வீடு இழந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் முன்பு ரூ. 100 உதவிப் பணம் வழங்கப்பட்டது இப்போது ரூ 200 கொடுக்கப்படுகிறது

கடந்த 30-ஆம் தேதி முடிய ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாவட்டத்தின் பெயர் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|
| தஞ்சை | 1,62,61,700 |
| திருச்சி | 37,38,300 |
| புதுக்கோட்டை | 21,22,600 |
| மதுரை | 4,61,770 |
| இராமநாதபுரம் | 4,88,155 |
| கோவை | 3,49,255 |
| சேலம் | 53,290 |
| செங்கல்பட்டு | 52,870 |
| வட ஆர்க்காடு | 30,805 |
| தென் ஆர்க்காடு | 13,060 |
| திருநெல்வேலி | 9,690 |
| நீலகிரி | 8,370 |
| தர்மபுரி | 1,400 |

மொத்தம் 2 கோடியே 36 இலட்சத்து 72 ஆயிரத்து 265 ரூபாய் வீடு இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### மூன்று புயல்கள் !

அக்டோபர் மூன்றாவது வாரத்தில் தோன்றிய புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துயர் துடைப்புப் பணிகளைச் செய்து முடிப்பதற்குள் மற்றொரு புயல் தோன்றி அச்சுறுத்தியது. ஆனால் அது மறைந்து விட்டது. 'அப்பாடா! தப்பித்தோம்' என்றிருந்த நிலையில் ஏறத்தாழ தீபாவளியன்று மற்றொரு கடும்புயல் வீசத் தொடங்கியது. பல ஆண்டுகளாக நீர்ப் பெருக்குக் காணாத பல ஆறுகள், கடும்புயல், பெருமழை காரணமாக வெள்ளத்தால் நிரம்பி வழிந்தன. மேட்டூர் நீர்த் தேக்கம் நிரம்பி வழிந்ததால், திருச்சிராப்பள்ளி நகரத்தின் தொல்லைகள் பெருகின என்று கூறுவதற்கில்லை. அதனால் காவிரியில் ஏற்பட்ட வெள்ளத்தை நாம் கட்டுப்படுத்தியிருக்க முடியும். ஆனால் அமராவதி, வறட்டாறு, குடகனாறு, சந்தானவர்த்தினி ஆறு முதலிய பல ஆறுகளின் வெள்ளப் பெருக்குக் காரணமாகவே திருச்சி நகரம் அல்லலுக்கு ஆட்பட வேண்டி வந்தது.

### திக்குமுக்காட வைத்த புயல் !

அதன்பின் மற்றொரு புயல் அடிக்கும் அபாயம் உருவாயிற்று. இது முதலில் நாகப்பட்டினத்தைப் பாதிக்கும்போல் இருந்தது. அதன்பின் கன்னியாகுமரியை நோக்கித் தெற்காகத் திரும்பியது. பின்னர் வடக்காகத் திரும்பி பாம்பனையும் மீண்டும் நாகப்பட்டினத்தையும், அதன் பின் கடலூரையும், சென்னையையும் நோக்கி வந்து, முடிவில், ஆந்திரப் பிரதேசத்திலுள்ள சிராலாவிற்குப் போயிற்று. இந்தப் புயல் இம்மாநிலத்தையே திக்குமுக்காட வைத்த, திணறடித்த, அபாயம் இங்கு வருமோ, அங்கு வருமோ என அச்சமுறும் அளவுக்கு மாறி மாறித் திசை திரும்பிய, எங்கும் தயார் நிலையில் இருந்தாக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திய பெரும் புயலாகும். மனிதனை விடத் திட்டமிட்டுப் பாய்ச்சல் காட்டுவதில் இயற்கை எத்துணை வலிமை வாய்ந்தது என்பதற்கு இப்புயல் எடுத்துக்காட்டாக அமைந்தது.

ஏதேனும் ஒரு தவறு செய்யப்பட்டிருப்பினும், ஒரு முனையில் மட்டும் அதாவது பாம்பன் பகுதியிலோ, தூத்துக்குடிப் பகுதியிலோ மட்டும் நாம் ஆயத்த நிலையில் இருந்திருப்போமேயானாலும் மனம் போன போக்கில் திசை திரும்பிய இப்புயலால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கும்! இரண்டு நாட்களாகச் சூறாவளியாக மாறிய புயலால்—மனம் போன போக்கில் திசை திரும்பிய இப்புயலால் எந்த இடத்தில் ஆபயம் ஏற்படுமோ எனத் தெரியாது, தவித்து, எல்லா இடங்களிலும் எல்லா வகைகளிலும் ஆயத்த நிலையில் இருப்பதற்கு எவராலும் ஏற்பாடு செய்வது அருமையாகும். விமானம் மூலம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இம்மாநில அரசு மின்னல் வேகத்தில் எடுத்து முடித்ததால், ஆந்திரப் பிரதேசம் விமானம் வேண்டும் எனக் கேட்பதற்கு முன்னரே விமானப்படை விமானங்களைப் பெங்களூர் தளத்துக்கு அனுப்பி வைக்க இயன்றதைக் குறித்து நாம் பெருமிதம் கொள்ளலாம்.

புயலால் தாக்குண்ட பகுதி மக்களைக் காப்பாற்றித் துயர் தணிக்கும் முதல் கட்டப் பணி நிறைவெய்தியது. அவர்களுக்குப் புதுவாழ்வளிக்கும் இரண்டாம் கட்டப் பணி, சென்ற வாரம் தொடங்கியது. இம்மாநில அமைச்சர்கள், மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம், அவர்கள் நாகப்பட்டினத்திலும் மாண்புமிகு திரு கே. காளிமுத்து அவர்கள் மதுரையிலும், மாண்புமிகு திரு பி. சௌந்தரபாண்டியன் அவர்கள் திருச்சியிலும் இருந்து கொண்டு நேரடியாக துயர் துடைப்புப்பணிகளை மேற்பார்வையிட்டு வருகின்றனர். வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்களான திரு ஆர். நடராஜன் அவர்கள் நாகப்பட்டினத்திலும், திரு ராமச்சந்தர் அவர்கள் திருச்சிராப்பள்ளியிலும் தங்கியிருந்து செயல்படுவதன் மூலம் இந்த இரண்டாம் கட்டப் பணி முனைப்பாக நிறைவேறி வருகிறது.

# மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகம்

''புயலால் பாதிக்கப்பட்ட பள்ளிக்கூட மாணவர்களுக்கு, இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்க, ஏற்பாடுகள் செய்யப்படும்'' என்று தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் திரு எச். எஸ். எஸ். லாரன்ஸ் அவர்கள் கூறினார்.

''புயல், வெள்ளத்தின் கொடுமையால், மாணவர்களது நோட்டுப் புத்தகங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. பாதிக்கப்பட்ட பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை, விரைவில் வழங்கப்படும்'' என்று அவர் கூறினார்.

## தமிழ்நாட்டில் 1,200 பேர்களை இராணுவம் காப்பாற்றியது !

தமிழ்நாட்டில் புயல்-வெள்ளத்தில் சிக்கிய 1,200 பேர்களை இராணுவ வீரர்கள் காப்பாற்றினார்கள் என்று இராணுவ அதிகாரி திரு ஆர். என். மதன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் நிருபர்களிடம் கூறியதாவது :—

புயல்-வெள்ளத்தில் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருந்தபோது, வெள்ளத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்ற இராணுவ உதவி கேட்கப்பட்டது.

உடனடியாகச் சென்னையில் உள்ள இராணுவ வீரர்கள் அங்கு அனுப்பப்பட்டனர்.

விசைப்படகுகள் மூலமாகவும், கட்டு மரங்கள் மூலமாகவும் வெள்ளப் பகுதிகளுக்குச் சென்று அவர்கள் மீட்புப் பணிகளைச் செய்தனர்.

அவர்களது உதவியால் 1,200 பேர் உயிரோடு காப்பாற்றப்பட்டனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சென்னையில் மழையினால் வெள்ளம் ஏற்பட்டபோது வெள்ளத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றிய அனுபவம் இராணுவ வீரர்களுக்கு இருந்ததால் இந்த அளவுக்கு அதிகப் பேர்களைக் காப்பாற்ற முடிந்தது.

## வீடுகட்டும் பொருள்கள் விற்க அரசுக் கிடங்குகள் !

புயல், வெள்ளத்தினால் வீடிழந்தவர்கள் மீண்டும் குடிசைகள் கட்டிக் கொள்வதற்குத் தேவையான மூங்கில் கழிகள், சவுக்குக் கட்டைகள், காற்றில் விழுந்து போன யூகலிப்டஸ் மரத் தூண்கள் முதலியவற்றை விற்பதற்குக் கிடங்குகளைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

நாகப்பட்டினம், திருவாரூர், மன்னார்குடி, மரக்காணம், குடுமியாமலை, புதுக்கோட்டை, வேடசந்தூர் ஆகிய இடங்களில் இந்தக் கிடங்குகள் திறக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தில் நுகர் பொருள் வாணிபக் கழகக் கடைகள் மூலமாகவும், நகர சபைகள் மூலமாகவும், இந்தப் பொருட்கள் விற்கப்படும்.

## தமிழ்நாட்டில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்றுள்ள சீரமைப்பு—துயர் துடைப்பு—மறுவாழ்வுப் பணிகள்!

### 1. சீரமைப்புப் பணிகள்

| | | |
|---|---|---|
| 1. | உடைப்புகள் அடைக்கப்பட்டு சீரமைக்கப்பட்ட பாசன ஆதாரங்கள் — | 3,595 |
| 2. | செப்பனிடப்பட்ட சாலைகள் — | 826 |
| 3. | மீண்டும் தொடர்பு பெற்ற தொலைபேசிகள் — | 5,135 |
| 4. | பழுதுபார்க்கப்பட்ட 'டிரான்ஸ்பார்மர்'கள், மின்சாரக் கம்பங்கள் — | 7,555 |

### 2. துயர்துடைப்பு—மறுவாழ்வுப் பணிகள்

| | | |
|---|---|---|
| 1 | குடிசை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருணை மானியம் | ரு. 2,67,83,540 |
| 2 | வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேட்டிகள், புடவைகள் | 2,57,037 ஜோடி |
| 3. | வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்குப் போடப்பட்டுள்ளத் தடுப்பு ஊசிகள் — | 6,68,525 |
| 4. | சம்பாதிக்கும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருணை உதவி | ரு. 46,000 |

# அனுதாபம் தெரிவித்தார்கள்!

## அமெரிக்கா

''சமீபத்திய புயல்களினால் உங்கள் நாட்டில் பலர் உயிரிழந்ததற்கும், ஏராளமானச் சேதம் நேர்ந்துள்ளதற்கும் அமெரிக்க மக்கள் சார்பிலும், எனது சார்பிலும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''புயலின் விளைவாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் அவசரத் தேவைகளைத் தீர்ப்பதற்கு எங்களால் ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால், தூதர் கொஹின் மூலமாகத் தயவு செய்து எனக்குத் தெரிவிக்கவும்'' என்று ஐக்கிய அமெரிக்க குடியரசின் தலைவர் திரு ஜிம்மி கார்ட்டர் அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ரஷியா

இந்தியாவில் புயலினால் ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதம், பொருட் சேதம் குறித்து ரஷிய அதிபர் திரு பிரெஷ்னெவ் அவர்களும், பிரதமர் திரு கோஸிஜின் அவர்களும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுக்கும், இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கும் தந்தி அனுப்பியுள்ளனர்.

ரஷ்யாவில் உள்ள இந்திய தூதர் திரு ஐ. கே. குஜ்ரால் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வருக்கு அவரது சார்பிலும் ரஷ்யாவில் உள்ள இந்தியர்கள் சார்பிலும் வெள்ளச் சேதம் பற்றி அனுதாபச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

## பிரிட்டன்

பிரிட்டிஷ் பிரதமர் திரு ஜேம்ஸ் கல்லகன் அவர்கள், நமது இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு டெலிபோன் செய்தார். தென்னிந்தியாவில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிவாரண முயற்சிகளில் உதவி தருவதாக அவர் கூறினார். புயல் பாதிப்பு குறித்து அவர் அனுதாபம் தெரிவித்தார்.

## பாகிஸ்தான்

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றில் புயலால் ஏற்பட்ட உயிர் இழப்பு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் செய்தியைப் பாகிஸ்தான் அதிபர் பஸல் இலாஹி செளதிரி அவர்கள் இந்தியக் குடியரசுத்தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

## யுகோ

புயலால் தென்னிந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பெரும் சேதம் குறித்து அனுதாபம் தெரிவித்து யுகோ அதிபர் திரு டிட்டோ குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டிக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.

## சுவிஸ்

இந்தியாவில் புயலால் பெரும் கஷ்ட நஷ்டமடைந்துள்ள மக்களுக்கு சுவிஸ் மக்களின் அனுதாபத்தை அந்நாட்டு அதிபர் திரு கர்ட் பாக்னர் தெரிவித்துள்ளார்.

## ஜப்பான்

இந்திய புயல் சேதம் குறித்து மேதகு ஜப்பானிய மன்னர் திரு ஹிரோஹிடோ அவர்கள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.

இந்தியாவில் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஜப்பான் பிரதிநிதிகள் சபை சபாநாயகர், யுகோஸ்லேவிய சோஷலிஸ்ட் குடியரசு அசெம்பிளித் தலைவர் ஆகியோர்களிடமிருந்தும் செய்திகள் வந்துள்ளன.

## நார்வே மன்னர்

நார்வே மன்னர் திரு ஓலவ் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து செய்தி அனுப்பியுள்ளார்.

## இலங்கை

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசாங்கம், மக்கள் ஆகியோரின் ''மனப்பூர்வமான, ஆழ்ந்த அனுதாபத்தை'' அந்நாட்டுப் பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

## நேப்பாளம்

புயலால் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்டுள்ள பிரமாண்ட சேதம் குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி நேப்பாள மன்னர் திரு வீரேந்திரா அவர்கள் ஒரு செய்தி அனுப்பியுள்ளார்.

## உ. பி. ஆளுநர்

புயலால் துன்புறும் தமிழ்நாடு மக்களுக்கு உத்திர பிரதேச ஆளுநர் திரு தபஸே அவர்கள் தம் ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் தெரிவித்து தமிழக ஆளுநர் அவர்களுக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.

## மேற்கு வங்கம்

தமிழ்நாட்டிலும், ஆந்திரப்பிரதேசத்திலும் புயலினால் ஏராள மக்கள் உயிரிழந்ததற்கும், பெருமளவுக்குச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதற்கும், மேற்கு வங்க அமைச்சரவை அனுதாபம் தெரிவித்துள்ளது. அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு நிமிஷ நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

மாண்புமிகு மேற்கு வங்காள முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு குஜராத் முதலமைச்சர் அவர்களும் தமிழகப் புயல் சேதத்திற்கு வருத்தம் தெரிவித்து தந்தி அனுப்பி இருக்கிறார்கள்.

## புனா நகரசபை

தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து புனா நகரசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

* * *

யு. எஸ். தூதர் ராபர்ட் கொஹீன் தனியாக அனுப்பிய செய்தியில், அனுதாபம் தெரிவித்தார்

### 'கத்தோலிக்' பாதிரியார்களின் உதவி!

இந்திய கத்தோலிக்க பாதிரியார் மாநாட்டைச் சேர்ந்த நிவாரண அமைப்பான 'காரிடாஸ் இந்தியா', ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் நிவாரணம் அளிக்க ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளது. இந்த அமைப்பு பிரதமர் நிவாரண நிதிக்கும் ரூ.1 இலட்சம் தரும்.

'காரிடாஸ் இந்தியாவின்' வெளிநாட்டு நன்கொடை அமைப்புகள், முதல் தவணையாக ஏற்கெனவே ரூ. 16 இலட்சம் வழங்கியுள்ளது.

### யூனிசெப் உதவி !

ஐ. நா. குழந்தைகள் நிதி (யூனிசெப்) ஆந்திரா, தமிழ்நாடு புயல் நிவாரணத்துக்கு உதவ உடனடியாக ரூ. 12.75 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.

மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களுக்குத் துணி, கம்பளிகள், பாத்திரங்கள் போன்றவைகளை வாங்கி அனுப்ப இந்த நிதி பயன்படுத்தப்படும்.

### 5 டன் கம்பளங்கள் உதவி!

தமிழ்நாட்டில் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக 5 டன் எடையுள்ள கம்பளங்களும் துணிகளும் இலண்டனிலிருந்து புதனன்று விமானம் மூலம் மீனம்பாக்கம் வந்து சேர்ந்தது. இலண்டனில் உள்ள ''முதியோருக்கு உதவும்'' நிறுவனம் இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளது. இந்த நிறுவனத்திலிருந்து வந்துள்ள குழுவின் தலைவர் திரு பிரான்சிஸ் சேவியர் அவர்கள் அப்பொருள்களைச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரதி வினேஜா அவர்களிடம் ஒப்படைத்தார்.

இந்த நிறுவனம் தற்போது முதியோர் விடுதிகளை நிறுவி நடத்துவதற்காகச் சென்னை, புதுச்சேரி, மதுரை ஆகிய இடங்களில் நிதி வசூலித்து வருகிறது.

### மத்திய நிலக்கரி நிறுவன ஊழியர்

சென்ட்ரல் கோல் பீல்ட்ஸ் ('கோல்') நிறுவனத்தின் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் அரைநாள் ஊதியம் தருவர். இதன் மூலம் ரூ. 11 இலட்சம் கிடைக்கும்.

மேற்கொண்டு தேவைப்படும் உதவிகளைக் கண்டறியத் தொழிற் சங்கத் தலைவர்கள் குழு ஒன்றையும் இந்த நிறுவனம் அனுப்புகிறது.

பிரதமர் திரு மால்கம் பிரேஸர் 50,000 டாலர் நன்கொடை வழங்கியுள்ளார்.

* * * *

மகாராஷ்டிர அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் தங்கள் ஒரு நாள் ஊதியமான 7 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளனர்.

* * * *

திருச்சி கொதிகலன் ஆலை ஊழியர்கள் விடுமுறை நாளான ஞாயிறன்று வேலை செய்து, அதன் மூலம் கிடைத்த ஒரு நாள் ஊதியமான ரூ. 1.50 இலட்சத்தை வழங்கியுள்ளனர்.

* * * *

### காத்ரெஜ் அறக்கட்டளை

காத்ரெஜ் அறக்கட்டளை புயல் நிவாரண நிதிக்கு ரூ. 2 இலட்சம் வழங்கியது.

அபீஜெ நிறுவனம் ரூ. 1.50 இலட்சம் கொடுத்தது.

# அள்ளியும் கொடுத்தார்கள்!

### செஞ்சிலுவைச் சங்க உதவி

தமிழ்நாட்டில் உடனடி புயல் நிவாரணப் பணிக்காகப் பணமாகவும், பொருளாகவும் ரூ. 10 இலட்சம் வரை உதவி செய்ய இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் (தேசியத் தலைமையகம்) உறுதி கூறியிருக்கிறது என்று சங்கத்தின் மாநிலக் கிளை வெளியிட்ட செய்திக் குறிப்பு கூறியது.

### பூடான் மன்னர் ரூ. 10 இலட்சம் உதவி !

தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க பூடான் மன்னர் திரு ஜிக்மி சிங்கே வாங்கக் அவர்கள், பிரதமர் நிவாரண நிதிக்கு ரூ. 10 இலட்சம் வழங்கியுள்ளார்.

### ஆகாகான் ரூ. 10 இலட்சம் உதவி !

தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க ரூ. 10 இலட்சம் நன்கொடையளிப்பதாக திரு ஆகாகான் அறிவித்துள்ளார்.

### நெல்லை மாவட்ட உதவி !

திருச்சி மாவட்டத்தில் கரூர், குளித்தலை நகர்களில் புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நெல்லை மாவட்டத்திலிருந்து ஒரு லாரி நிறைய ரூ. 80,000 பெறுமானமுள்ள வேட்டி, சேலைகள் 26-11-77 அன்று இரவு அனுப்பப்பட்டது.

நெல்லை மாவட்டம் உதவும் நான்காவது உதவி இது. அங்கிருந்து ஏற்கெனவே 12,000 வேட்டிகள், 12,000 சேலைகள் அனுப்பப்பட்டன. தஞ்சைக்கு 2 லாரியிலும், திருச்சிக்கு 2 லாரியிலும் இந்தப் பொருள்கள் போயுள்ளன.

### ஆஸ்திரேலியப் பிரதமர் உதவி !

பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்க ஆஸ்திரேலியப்

மாண்புமிகு மேற்குவங்க முதல்வர் திரு ஜோதிபாசு அவர்கள் தமிழக முதல்வர் வெள்ள நிவாரண நிதிக்கு ரூபாய் ஒரு இலட்சம் அனுப்பி உள்ளார்.

குஜராத் முதல்வரும் ரூபாய் ஒரு இலட்சம் அனுப்பியிருக்கிறார்.

### ஜைன சமுக உதவி

வர்த்தமான சேவா கேந்திரம் என்ற ஜைன சமூகசேவை நிறுவனம் இரண்டு மாநிலங்களுக்கும் ரூ. 2 இலட்சம் நிதி திரட்டி அனுப்ப முடிவு செய்துள்ளது.

### யு. எஸ். தூதர் உதவி

தன் வசமுள்ள 25,000 டாலர் முழுவதையும் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு உடனடியாக வழங்குவதாக யு. எஸ். தூதர் ராபர்ட் கொஹீன் அவர்கள் கூறினர்.

* * * *

காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜ சுவாமி ஆலய அறங்காவலர்கள் ரூ. 1801 பெறுமானமுள்ள புடவைகளை வழங்கியுள்ளனர்.

### மேற்கு ஜெர்மன் உதவி ரூ. 77 இலட்சம் !

தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் ஏற்பட்ட புயல்-வெள்ள நிவாரணத்துக்காக மேற்கு ஜெர்மன் அரசாங்கம் ரூ. 77 இலட்சம் கொடுப்பதாக அறிவித்திருக்கிறது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களிடம் மேற்கு ஜெர்மனி தூதுவர் திரு டர்க் ஆங்கன் ரூ. 38,30,000-க்கான காசோலை ஒன்றை அளித்தார். சென்னையில் உள்ள மேற்கு ஜெர்மனி கான்ஸில்-ஜெனரல், உடனடி நிவாரணத்துக்காக ஆந்திராவுக்கு ரூ. 1,31,041-ம், தமிழ்நாட்டுக்கு ரூ. 60,521-ம் அளித்திருக்கிறார்.

### ஐ. நா. ஸ்தாபனம் 1.5 இலட்சம் டாலர் உதவி !

இந்தியாவில் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஐ. நா. குழந்தைகள் ஸ்தாபனம் (யூனிசெப்) 12 ஆயிரம் போர்வைகள் மற்றும் சில சாதனங்களை வாங்கியிருப்பதாக அறிவித்தது.

புதுடில்லி, சென்னையிலுள்ள இந்த ஸ்தாபனப் பிரதிநிதிகளிடம் இதுபோன்ற பொருட்களை விலைக்கு வாங்க 25,000 டாலர் நிதி உள்ளது என்றும் தெரிவிக்கிறது.

இந்தியாவுக்கு உதவ 'யுனிசெப்' ஸ்தாபன நிர்வாக இயக்குநர் திரு ஹென்றி லாபாகி அவசர நிதியிலிருந்து 1,50,000 டாலர் அளித்தார்.

### பிரிட்டன் உதவி

தென்னிந்திய புயல் நிவாரணத்துக்கு வயோதிகர்களுக்கான பிரிட்டிஷ் அறக்கட்டளை 5,000 பவுன் நன்கொடை வழங்கியுள்ளது.

இலண்டனிலுள்ள ஜீவரட்சக சங்கம் 5,000 பவுன் மதிப்புள்ள மருந்துகளை அன்பளிப்பாக விமானம் மூலம் சென்னைக்கு அனுப்புகிறது. இதைத் தவிர கம்பளிகள் அனுப்பவும் ஏற்பாடாகி வருகிறது.

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவி :

பல நாடுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்கள் இந்தியாவில் ஏற்பட்டுள்ள புயல் நாசத்துக்கு உதவ முன்வந்துள்ளதாக ஜினீவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இணைப்பு அலுவலகம் தெரிவிக்கிறது. இந்த நிறுவனத்தின் இயக்குநர் ஒருவரும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தமிழ்நாட்டின் கிளை, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு கிராமங்களின் நிவாரணப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தஞ்சை, நாகப்பட்டினத்திற்கு அருகில் 4 மீனவ கிராமங்களை அது தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் செஞ்சிலுவைச் சங்கம் ரூ. 4 இலட்சம் மதிப்புள்ள பண்டங்களை நன்கொடையாக வழங்கியிருப்பதாக அதன் தமிழ்நாட்டுக் கிளையின் துணைத் தலைவர் ஜெனரல் திரு ரா[illegible] அவர்கள் தெரிவித்தார். 5 வாகனம் நிறைய குழந்தைகளுக்கான உணவு, பால் பவுடர், அரிசி ஆகியவை வந்து கொண்டிருக்கின்றன.

### குஜராத் அரசு ரூ. 3 இலட்சம் உதவி !

தமிழ்நாட்டில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்திற்காக, குஜராத் மாநில அரசு ரூ. 1 இலட்சம் நன்கொடையை அளித்துள்ளது.

### மகாராஷ்டிர அரசு உதவி !

புயலினால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு ரூ. 2 இலட்சமும், புதுச்சேரிக்கு ரூபாய் ஒரு இலட்சமும் உடனடியாக நிதி உதவி அளிப்பது என்று மகாராஷ்டிர அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

### 'காஸா' நிறுவன உதவி !

தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் புயலால் பாதிக்கப்பட்ட 50,000 பேருக்கு நிவாரணத்திற்கு சமூகப் பணிக்கான சர்ச்சின் துணை நிறுவனம் (காஸா) என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்த ஏற்பாட்டின்படி தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை, தஞ்சை மாவட்டங்களில் 25,000 பேருக்கும், ஆந்திராவில் குண்டூர் மாவட்டத்தில் 25,000 பேருக்கும் 7 நாட்களுக்குச் சமைக்கப்பட்ட உணவு வழங்கப்படும். அத்துடன் 12,000 போர்வைகளும் தரப்படும். சுமார் ரூ. 4 இலட்சம் செலவில் இது நடக்கும்.

### 'கேர்' நிறுவனம் மூலம் 25,000 டாலர் உதவி :

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் புயல் நிவாரணப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காக 'கேர்' நிறுவனத்தின் சார்பாக 25,000 டாலருக்கு ஒரு காசோலையை அமெரிக்கத் தூதர் திரு இராபர்ட் கோஹீன் டில்லியில் அளித்தார்.

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றில் ஸ்தல சமூக நலத்துறை மூலமாக 'கேர்' நிறுவனம் உதவி அளிக்கிறது. 'கேர்' நிறுவனம் 1,300 டன் உணவுப் பொருட்களைப் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக அனுப்புகிறது. தமிழ்நாட்டுக்கு உணவுப்பொருட்களும் ரூ. 3,40,000 பெறுமானம் உள்ள துணிகளையும் சம்பந்தப்பட்ட நிவாரணப்பொருட்களையும் 'கேர்' 'நிறுவனம்' வாங்கியிருக்கிறது.

### தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி ரூ. 10 இலட்சம் வழங்குகிறது !

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமிழக முதல்வர் திரட்டும் வெள்ள நிவாரண நிதிக்குத் தங்களது ஒரு நாள் ஊதியத்தை அளிக்கின்றனர்.

ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட இந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி தரும் தொகை 10 இலட்ச ரூபாய் ஆகும்.

### இந்துஸ்தான் லீவர் ரூ. 3 இலட்சம்

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளில் உதவுவதற்காக ரூ. 3 இலட்சத்திற்கான காசோலை ஒன்றை 'இந்துஸ்தான் லீவர்' நிறுவனத்தின் தலைவர் திரு டி. தாமஸ், பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களிடம் வழங்கினார்.

### 'இந்துஸ்தான் ஆண்டிபயாடிக்ஸ்'

ரூ. 25 இலட்சம் பெறுமான் பெனிஸிலின், ஸ்டிரெப்டோமைசின் மருந்துகளை 'பிம்ப்ரி' என்ற இடத்தில் உள்ள இந்துஸ்தான் ஆண்டிபயாடிக்ஸ் (அரசாங்க மருந்து உற்பத்தி) நிறுவனம் ஆந்திராவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. ஏற்கெனவே ரூ. 1.5 இலட்சம் பெறுமான மருந்துகள் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



▲ மாண்புமிகு இந்திய அரசின் பெட்ரோலிய-இரசாயனத்துறை அமைச்சர் திரு பகுகுணா அவர்கள், தமிழக புயல்-வெள்ள நிவாரணத்திற்காக, 'இந்தியன் பார்மசூட்டிகல் லிமிடெட்', 'இந்தியன் ஆண்டிபயாடிக் லிமிடெட்' ஆகியவற்றின் சார்பில், ரூபாய் 5 இலட்சம் மதிப்புள்ள மருந்து வகைகளை வழங்கும் முகத்தான், மருந்துகள் அடங்கிய ஒரு அடையாளப் பெட்டியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் வழங்கினார்.

# பொருள் குவிகிறது!



▲ 'கேர்' நிறுவனத்தின் தமிழகக் கிளை நிர்வாகி திரு ஜேம்ஸ் லோரி அவர்கள், 'கேர்' நிறுவனத்தின் சார்பாக ரூபாய் 57,60,397 மதிப்புள்ள உணவுப் பொருள்களை வழங்கும் முகத்தான், உணவுப் பொருள்கள் அடங்கிய ஒரு அடையாளப் பெட்டியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்



சென்னை மலர்வியாபாரிகள், கமிஷன் ஏஜெண்டுகள் சங்கத்தின் சார்பில் ரூபாய் 10,100 மதிப்புள்ள 1,001 ஆடைகள் வழங்கினர்.





தமிழ்நாடு முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களிடம் இந்தியன் வங்கித் தலைவரும், நிர்வாக இயக்குநருமான திரு எம். வி. சுப்பாராவ் ரூ. 3 இலட்சத்துக்கான காசோலை ஒன்றை வழங்கினார். முதலமைச்சர் வெள்ள நிவாரண நிதிக்காக இந்தியன் வங்கி சார்பில் இந்தத் தொகை அளிக்கப்பட்டது.





# நிதி குவிகிறது!







**வெள்ளம் வடிந்து விட்டது!**
**கண்ணீர் வடிவது நிற்க வில்லை!!**
**அந்தக் கண்ணீரைத் துடைப்பது**
**நம் கடமையல்லவா?**

ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று புயல்கள் தோன்றி
தமிழகத்தை வெள்ளக் காடாக்கி விட்டன!
அந்த வெள்ளத்தினால்,
உற்றார் உறவினரை இழந்து
வீடுகளை இழந்து,
மாடுகளை இழந்து,
ஆடுகளை இழந்து,
அறுவடைக்குத் தயாராய் இருந்த பயிரையும் இழந்து
இலட்சக்கணக்கானோர் தேம்பி அழுகின்றனர்!



தேம்பி அழுவோரின் கண்ணீரைத் துடைப்பதற்காக,
தமிழ்நாடு அரசு, துயர்துடைப்புப் பணிகளைப்
'போர்க்காலப் பணிகளைப் போல்' விரைவாகச்
செயல் படுத்தி வருகிறது. மைய அரசும்
தாராளமாக நிதி உதவுவதாக உறுதியளித்துள்ளது.
ஆயினும், நம் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களுக்கு
உதவுவது நம் கடமையல்லவா?

அல்லற்பட்டு ஆற்றாது அழுகின்றவர்களின்
கண்ணீர் நிற்க வேண்டுமானால், அவர்களின்
வேதனைகளை விரைந்து தீர்த்திட வேண்டும்!



வேதனைகளை விரைவாகத் தீர்த்திட வேண்டுமானால்,
துயர்துடைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற வேண்டுமானால்,
அனைவரும் மனமுவந்து நிதியளித்திட வேண்டும்!

**எனவே,**
**பேரன்பு மிக்கோரே! பெற்ற தாய்மாரே!!**
**நிதி மிகுந்தோர் பொற்குவை தாரீர்!**
**நிதி குறைந்தோர் காசுகள் தாரீர்!!**
**உடல்வலிவுள்ளோர் உழைப்பினைத் தாரீர்!!!**
**ஏனையோரெல்லாம் இயன்றதைத் தாரீர்!!!!**

# தருவீர்! ஒரு நாள் ஊதியம்!

## தொழிலாளத் தோழர்களுக்குத் தொழிற்சங்கத் தலைவர்கள் வேண்டுகோள்!

வெள்ளத்தினாலும், புயலினாலும் தவிப்பவர்களுக்கு உதவ, தமிழ்நாட்டில் உள்ள எல்லாத் தொழிலாளர்களும், கட்சி வேற்றுமையின்றி, ஒரு நாள் ஊதியத்தை அளிப்பது என்று தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்துக் கட்சித் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூட்டம், 20-11-1977 அன்று சென்னையில் நடந்தது.

கூட்டத்துக்கு மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு மனோகரன், திரு பொன்னையன், திரு இராகவானந்தம், தொழிலாளர் நலத்துறைச் செயலாளர் திரு இராமச்சந்திரன், தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் திரு கமலரத்தினம், கூட்டு ஆணையாளர் திரு எஸ். நரசிம்மன் ஆகியவர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(1) ஐ.என்.டி.யூ.சி.
(2) ஏ. ஐ. டி. யூ. சி.
(3) உழைக்கும் மக்கள் மாமன்றம்
(4) சி.ஐ.டி.யூ.
(5) அண்ணா தொழிற்சங்கப் பேரவை
(6) ஐக்கிய தொழிற் சங்க காங்கிரஸ்
(7) தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ்,
(8) தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை
(9) ஹிந்த் மஜ்தூர் சபா

ஆகிய 9 தொழிற் சங்கத் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு பி. ராமமூர்த்தி
திரு ஆர். உமாநாத்
திரு வி.பி. சிந்தன்
திரு கே. எம். சுந்தரம்
திரு ஏ. எம் கோபு
திரு கே. டி. கே. தங்கமணி
திரு ஆர். ரங்கராஜன் குமாரமங்கலம்
திரு எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை
திரு ஆர். குசேலர்
திரு ஆர். ராமநாதன்
திரு ஏ. நல்லசிவம்
திரு வை. பெருமாள்
திரு கே. எஸ். நாராயணன்
திரு சி. குப்புசாமி

ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் புயலினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட சேதங்கள் பற்றிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின :—

''தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயலும், வெள்ளமும் ஏற்படுத்தியுள்ள உயிர்ச்சேதமும் உடைமை நட்டமும், வரலாற்றில் கண்டிராததாகும்.

''தமிழகத்திற்கு இயற்கையின் சீற்றத்தால் நேர்ந்துள்ள இந்தக் கடும் சோதனையைச் சமாளிக்க, மத்திய மாநில அரசுகள் எடுத்து வரும் முயற்சிகளுக்குத் தொழிலாளத் தோழர்கள் தங்கள் பங்கைச் செலுத்த முன் வருவது தீராக் கடமை என்று நாங்கள் உணருகிறோம்.

''மாநிலத்தில் உள்ள தொழிலாளர்களும், ஊழியர்களும், சங்க வேற்றுமைகளைப் பாராமல் வாராந்திர விடுமுறை நாளில் வேலை செய்து, அதனால் கிடைக்கும் ''ஓவர் டைம்'' முழு ஊதியத்தையும், தமிழக முதல்வரின் நிவாரண நிதியில், சேர்க்க முன் வர வேண்டும். இதற்குக் கம்பெனி நிர்வாகங்களும் ஒத்துழைக்க வேண்டும்.

''வாராந்திர விடுமுறை இல்லாத தொழிற்சாலைகளில், பணிமனைகளில், ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்கள், ஒரு நாள் சம்பளத்தை உடனடியாக முன் பணமாக நிவாரண நிதிக்கு வழங்க வேண்டும்.

''நிவாரணப் பணியின் அவசர அவசியம் கருதி, ஊழியர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்து கொள்வதை எதிர்பார்த்து, உடனடியாக ஊதியத் தொகையைச் சேர்த்து முதல்வரின் நிவாரண நிதிக்கு வழங்க நிர்வாகங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

பாங்கி, ஆயுள் இன்சூரன்சு போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், மத்திய, மாநில அரசு ஊழியர்களும், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அனைவரும், இதே முறையில் உதவி செய்ய வேண்டும் எனக் கோருகிறோம்.''

மேற்கண்டவாறு தீர்மானத்தில் கூறப்பட்டு உள்ளது.

### உலகத் தொழிற்சங்க சம்மேளனம் 10,000 டாலர் உதவி:

உலகத் தொழிற்சங்க சம்மேளனம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10,000 டாலர் நன்கொடையை அளித்துள்ளது.

### கர்நாடக அரசு தொழிலாளர்கள் அளிக்கும் உதவி

தமிழ்நாடு, ஆந்திராவில் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க கர்நாடக அரசு தொழிலாளர் இலாகா அதிகாரிகாரிகள், ஊழியர்கள் ஒரு நாள் ஊதியத்தை வழங்க 26-11-77-ல் முடிவு செய்தனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



பதிவு எண். M. 8676

